REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 25 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 229 | Wednesday 25, September, 2024 | 16பக்கங்கள் | 50/-

**வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட**

## அனைத்து மாகாணங்களின் ஆளுநர்களும் இராஜினாமா

லோரன்ஸ் செல்வநாயகம்

RESIGNED

வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள் உட்பட அனைத்து மாகாண ஆளுநர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர். ஏற்கனவே சில மாகாண ஆளுநர்கள் தமது பதவியை

06

## அரசியல் குடும்பப் பின்னணி அற்ற தெற்காசியாவின் முதல் பெண் பிரதமராக

# கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவியேற்பு



தெற்காசிய நாடுகளிலிருந்து அரசியல் குடும்பப் பின்னணிகள் இல்லாத முதல் பெண் பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரிய தனது பணியை ஆரம்பித்துள்ளார்.

இலங்கையின் 16 ஆவது பிரதமராக பதவியேற்ற கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று (24) பிற்பகல் கொழும்பு பிளவர் வீதியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் தனது கடமையை ஆரம்பித்தார். தெற்காசியாவின் அனைத்து நாடுகளிலிருந்தும் அரசியல் குடும்பப் பின்னணி இல்லாமல் பிரதமரான முதல் பெண்மணி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

06

## ஜனாதிபதி இன்று நாட்டு மக்களுக்கு உரை



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று (25) நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார். இந்த விசேட அறிவிப்பு இன்று (25) இரவு 7.30 மணிக்கு அனைத்து இலத்திரனியல் ஊடகங்களிலும் நேரடியாக ஒளிபரப்பப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்தது.

## தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை நியமனம்

**ஜனாதிபதி அநுரகுமார முன்னிலையில் பதவிப்பிரமாணம்**

லோரன்ஸ் செல்வநாயகம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சரவை நேற்று பதவியேற்றுக்கொண்டது. ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பதவியேற்பு வைபவத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் அமைச்சர்கள் உத்தியோகபூர்வமாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

பாதுகாப்பு, நிதி, பொருளாதார அபிவிருத்தி, தேசிய கொள்கைகள், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை, வலுசக்தி, விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல்வளம் ஆகிய அமைச்சுகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கீழ் செயற்படவுள்ளன.

நாட்டின் 28ஆவது புதிய பிரதமராகவும் 03ஆவது

06

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அமைச்சராக விஜித ஹேரத் எம்.பி பதவிப்பிரமாணம்**



தேசிய மக்கள் சக்தியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அமைச்சராக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்ட போது...



03

**ஐக்கிய தேசிய கட்சி கூட்டணியுடன் ஒருபோதும் இணைய போவதில்லை**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

### இலங்கையின் மீட்சிக்கான

## சீர்திருத்தங்களுக்கு EU தொடர்ந்தும் ஆதரவளிக்கும்




**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வாழ்த்து தெரிவிப்பு**

செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் பெரும்பாலானவர்கள் வாக்களித்ததன் மூலம் இலங்கை மக்கள் ஜனநாயகத்துக்கான தமது அர்ப்பணிப்பை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

போட்டி நிறைந்த அரசியல் சூழலில் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றுள்ளது. இலங்கையின் அதிகாரிகளின் அழைப்பின்

06

## புதிய ஜனாதிபதி, அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற IMF இணக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்



**விரைவில் மூன்றாவது மீளாய்வு உள்ளிட்ட பேச்சுவார்த்தை -IMF பேச்சாளர் தெரிவிப்பு**

இலங்கையில் புதிதாக ஆட்சி பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அத்துடன் மூன்றாவது மீளாய்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கும் தயாராகவுள்ளதாகவும் அந்த நிதியம் தெரிவித்துள்ளது.

06

## பொது தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயார்

**தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்**



பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகி வருவதுடன், அடுத்த பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவிக்கையில், தேர்தல் தொடர்பான பேச்சுகளை

06

**பொலிஸ், குடிவரவு, ஆட்பதிவு**

## திணைக்களங்களை வினைத்திறனாக செயற்படுத்துவதே அரசின் நோக்கம்




பொலிஸ் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், ஆட்பதிவு திணைக்கம் ஆகியவற்றிலிருந்து பொதுமக்களுக்கு வினைத்திறனுடனும் பயனுள்ளதாகவும் சேவைகளை வழங்குவதே புதிய அரசாங்கத்தின் நோக்கமாகுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ரவி செனவிரத்ன தெரிவித்தார்.

06

**எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில்**

## ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக நானே

**ரணிலுடன் இணையப் போவதில்லை -எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச**



லோரன்ஸ் செல்வநாயகம்

ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாமே களமிறங்கப் போவதாக

06

## ஜனாதிபதி அநுரகுமாரவிடம் அரியநேத்திரன் விடுத்த கோரிக்கை



புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ள தமிழ் பொதுக் கட்டமைப்பின் கீழ் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர் பாக்கியச்செல்வம் அரியநேத்திரன், தமிழர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பிளாந்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

06

## ஜனாதிபதி அநுரவுக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்து



இலங்கையின் 09ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்து செய்தியில் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

"எங்களுடைய பொருளாதார மற்றும் சமூக சவால்களை சமாளிக்க தேவையான சீர்திருத்தங்களை நீங்கள் தொடரும் போது உங்களுடைய மிகவும் போற்றப்படும் நடைமுறைவாதம்

06

# வணக்கத் தலங்களில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க







ஜனாதிபதியாக பதவியேற்றபின் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று முன்தினம் (23) வரலாற்று பிரசித்திபெற்ற தலதா மாளிகை மற்றும் மல்வத்து பீடங்களுக்கு சென்று வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டார்.




கண்டி நகரிலுள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க (23) வழிபாடுகளில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.



கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க (23) பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.




கொழும்பிலுள்ள தெவட்டகஹ பள்ளிவாசலுக்குச் சென்ற (23) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வணக்க வழிபாடுகள் மற்றும் துஆ பிரார்த்தனைகளில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.

# சவால்கள் பலவற்றை கடந்து அரைநூற்றாண்டு வெற்றிப் பயணத்தில் யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகமாக 'இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம்' என்ற பெயருடன் 1974 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது. இவ்வளாகமானது முதன்மையாக கலை மற்றும் விஞ்ஞான துறைகளில் கவனம் செலுத்தி ஒரு சில பீடங்கள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது 1974 இன் முற்பகுதியில் பல்கலைக்கழக வளாகங்களுக்கு இளங்கலைப் பட்டதாரிகள் உள்வாங்கப்பட்டனர். பெரும்பாலான மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கு நீண்ட வருடம் காத்திருக்க வேண்டிய அவலநிலை காணப்பட்டது. பின்னர், முக்கியமாக கொழும்பு ஆனந்தா கல்லூரியைச் சேர்ந்த ஒரு சிறிய குழு ஒன்றுகூடி, கட்டுபெத்த வளாகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற மாணவர்களை, பல்கலைக்கழக செனட் சபைக்கு (இப்போது அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு) விவாதத்திற்காக பத்திரிகை விளம்பரம் மூலம் அழைத்தது.

யாழ் மாணவர்கள் உட்பட பெரும்பாலான மாணவர்கள் இந்த விளம்பரத்திற்குப் பதிலளித்தனர். பின்னர் அதே வருடத்தில் எங்களுக்கு பல்கலைக்கழக நுழைவுத் திட்டத்தை வழங்குவதற்கு செல்வாக்கு செலுத்துவதற்கான ஒரு உபாயகொள்கை வகுப்பாளர்களை நாங்கள் உருவாக்க வேண்டிய தேவையிருந்தது. அப்போது ஒரேயொரு பல்கலைக்கழகம் மட்டும் இருந்ததால் ஒரேயொரு துணைவேந்தர் மட்டுமே இருந்தார். அவர்தான் மறைந்த எல்.எச்.சுமணதாச. அவர் எங்கள் மீது மிகுந்த ஆர்வம் காட்டி எங்களின் கோரிக்கையை ஆதரித்தார், ஆனால் ஏற்கனவே உள்ள வளாகங்கள் மாணவர்களால் நிரம்பியிருந்ததால் அவரால் எடுத்த காரியத்தில் வெற்றி பெறமுடியவில்லை.




அதன் பின்னர் எனது தந்தையின் உதவி மூலம் எமது பிரதேசத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார மற்றும் மறைந்த சரத் முத்தெட்டுகம ஆகியோரின் ஊடாக பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். பல சந்திப்புகள், கலந்துரையாடல்களுக்குப் பிறகு, அப்போதைய பிரதமர் மறைந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலைக் கட்டடங்களைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகத்தைத் திறக்க முடிவு செய்தார்.

வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி ஆகியவற்றிலிருந்து கட்டடங்களைக் கையகப்படுத்துவதில் அரசாங்கம் வெற்றி பெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவில் 95 வீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் யாழ்ப்பாணம் செல்ல ஒப்புக்கொண்டனர். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் முதல் தலைவராக மறைந்த பேராசிரியர் கே.கைலாசபதி செயற்பட்டார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 1974 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அப்போதைய பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது. யாழ் வளாகத்தின முதல் தொகுதி மாணவர் குழாம் என்ற பெருமைக்குரிய வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

நான் அறிந்த யாழ்ப்பாணம் அந்த நேரத்தில் பிரபலமான 'இரவு தபால் அஞ்சல் புகையிரதத்திற்கு' அப்பாற்பட்டது. பல்கலைக்கழகப் பட்டம் பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்த எங்கள் குழுவில் பெரும்பாலானோருக்கு, யாழ் குடாநாடு என்பது 'தரிசு நிலம், பனை மரங்களுடன் மணல் நிரம்பிய பட்டியலிடப்படாத நிலப்பரப்பு' என்ற சிறு முகவுரையைத் தவிர வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை. இருந்தபோதிலும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளவர்களின் கல்விப் பாரம்பரியம், தொழில் முன்னேற்றம், விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பால் இவர்கள் கொண்டுள்ள கலாசாரம் மற்றும் செல்வநிலை பற்றி நான் அதிகம் கற்றுக் கொண்டேன். புதிய சூழலை எதிர் கொள்ள நான் தயாராக இருந்தேன்.

தெற்கில் இருந்த எங்கள் அனைவருக்கும் வடக்கின் மதிப்புகள் மற்றும் கட்டமைப்புக்களை ஏற்றுக்கொள்ள நீண்ட காலம் எடுக்கவில்லை.

அவிசாவளையைச் சேர்ந்த எனது தந்தை மற்றும் தாய் ஆகிய இருவரும் பாடசாலை ஆசிரியர்கள். கல்வியை பரந்த அளவில் சிந்தித்து, முன்னெடுத்து வாழ்ந்து, அயராது உழைத்தவர்கள். தெற்கில் ஆழமாக வேரூன்றிய சிங்களக் குடும்பத்தில் பிறந்தாலும் இனம், மதம், மொழி என்ற வெறுப்புகள் இல்லாது, சிறுவயதிலேயே முதிர்ச்சியடைந்த சிந்தனையுடையவனாக வளர்த்த எனது பெற்றோருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நாளை தொடரும்)



**இக்கட்டுரையின் எழுத்தாளர் கிங்ஸ்லி பெர்னார்ட், யாழ் பல்கலைக்கழகத்தின் முதல் தொகுதி மாணவர் என்பதுடன், இலங்கையில் பல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், வர்த்தக சம்மேளனங்கள், சேவை வழங்கும் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் என்பவற்றில் அதிஉயர் பதவி வகித்ததுடன், லயன்ஸ் இன்டர்நேசனல்–306 டீ 2 இலங்கை, 2009–2010 வரையான காலப்பகுதியில் அதன் மாவட்ட ஆளுநராக கடமையாற்றியவர். அவர் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திசபையின் தற்போதைய தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார்.**

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 25 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN


தொழுகை நேரம்

சுபஹ் - 04.44
ழுஹர் - 12.04
அஸர் - 03.16
மஃரிப் - 06.07
இஷா - 07.17

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் புரட்டாதி 09

ராகுகாலம் : பகல் : 12.02 - 1.32வரை
சுபநேரம் : மாலை : 4.32 - 6.02வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# இம்முறை ஜனாதிபதி தேர்தலில் 35 வேட்பாளர்கள் கட்டுப்பணம் இழப்பு

## 3.5 மில்லியன் பேர் வாக்களிக்கவில்லை



ஜனாதிபதி தேர்தலுக்காக களமிறங்கிய வேட்பாளர்களுள் 35 பேர் கட்டுப்பணத்தை இழந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

12.5 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறத் தவறியதன் காரணமாகவே 35 பேரின் கட்டுப்பணம் கையகப்படுத்தப்படுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாச மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கே கட்டுப்பணம் கிடைக்குமென அவர் தெரிவித்துள்ளார்.

2024 ஜனாதிபதி தேர்தலில் 79 வீத வாக்குகளே பதிவாகின.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தோரின் வீதம் 83 வீதமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் 3.5 மில்லியன் மக்கள் வாக்களிக்கவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் போட்டியிடார்

## ஐ.தே.க. பிரதி தலைவர் ருவன் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டாரென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் முன்னாள் அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்துள்ள அவர், எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு வருவார் என்றும் எதிர்பார்க்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் முடிவுகளின்படி மூன்றாம் இடத்துக்கு

06

# முட்டை உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு

முட்டை உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்துள்ளதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார். இந்த வருடம் ஏப்ரல் மாதம் 31ஆம் திகதி முதல் முட்டை இறக்குமதி செய்யப்படவில்லையென தெரிவித்த அவர், நுகர்வோர் உள்ளூர் சந்தையில் 35 முதல் 40 ரூபாய்க்கு இடைப்பட்ட குறைந்த விலையில் முட்டைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் கூறினார்.

முட்டை உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைவதற்கு உழைத்த உற்பத்தியாளர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

இலங்கை கால்நடை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.



ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்னிலையில் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட கலாநிதி ஹரிணி அமரசூரிய, சுகாதார அமைச்சராகவும் நேற்று நியமிக்கப்பட்டார். அதனையடுத்து சுகாதார அமைச்சராக உத்தியோகபூர்வமாக கடமையை சுகாதார அமைச்சில் பொறுப்பேற்றுக்கொண்ட போது......

# ஐக்கிய தேசிய கட்சி கூட்டணியுடன் ஒருபோதும் இணைய போவதில்லை

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கும் கூட்டணியில் ஒருபோதும் இணையப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற அக்கட்சியின் உயர் அரசியல் பீடத்தின் முக்கிய பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அது தொடர்பிலான அனைத்து மட்ட அரசியல் நடவடிக்கைகளையும் கட்சி திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் கட்சியின் தலைவர் என்ற வகையில் பொதுஜன பெரமுன கட்சியை பிரபலமான கட்சியாக கட்டியெழுப்புவதற்கு

06

# அமைச்சுகளின் செயலாளர்கள் நியமனம்

புதிய பிரதமரின் செயலாளர், அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளிட்ட15 பேர் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

01. ஜீ.பீ. சபுதந்திரி பிரதமரின் செயலாளர்

02.டபிள்யூ.எம்.டீ.ஜே.பெர்னாண்டோ அமைச்சரவையின் செயலாளர்

03. கே.டீ.எஸ்.ருவன்சந்திர போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு

04. கே.எம்.எம்.சிறிவர்தன நிதி, பொருளாதார அபிவிருத்தி, தேசிய கொள்கைகள், திட்டமிடல் மற்றும் சுற்றுலாஅமைச்சு

05 . அருணி விஜேவர்தன வெளிவிகார அமைச்சு

06. ஜே.எம்.டீ.ஜயசுந்தர கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

07. கே.மகேசன் மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சு

08. எம்.எம்.நயிமுதீன் வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு

09. ஏ.எம்.பீ.எம்.பீ.அத்தபத்து கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

10. பாலித குணரத்ன மஹிபால சுகாதார அமைச்சு

11. டபிள்யூ.பீ.பீ.யசரத்ன நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு

12. பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி சுற்றாடல், வன ஜீவராசிகள், வன வளங்கள், நீர்வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

13. எம்.பீ.என்.எம்.விக்கிரமசிங்க விவசாயம், காணி, கால் நடை, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு

14. எச்.எஸ்.எஸ். துய்யகொந்த பாதுகாப்பு அமைச்சு

15. டீ.டபிள்யூ.ஆர்.பீ. செனவிரத்ன பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

16. ரஞ்சித் ஆரியரத்ன புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு

17. பேராசிரியர் கே.டீ.எம். உதயங்க ஹேமபால வலுசக்தி அமைச்சு





வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ரஞ்சித் ஆரியரத்ன நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். ஊடகத்துறை அமைச்சு அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்ற அவர், அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடினார்.

# அரியநேத்திரனை தமிழ் மக்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை

## இனியும் வேண்டாம் விபரீத விளையாட்டு

### தமிழ் பொதுக் கட்டமைப்பிடம் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

யாழ் . விசேட நிருபர்



நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் வெறும் 1.69% வாக்குகளையே பெற்றதன் மூலம் அரியநேத்திரன் தமிழ் மக்களால் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை என்பது நிரூபணமாகியிருப்பதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இந்தத் தடவை மக்களது மதிநுட்பத்தால் இந்தப் பெரும் அபாயத்திலிருந்து நாம் தப்பித்துக் கொண்டுள்ளோம். இனிமேலும் இந்த விதமான விபரீத விளையாட்டுகளில் ஈடுபட வேண்டாமென தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோரிடம் வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2024 ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற எண்ணக்கரு உதயமான பொழுதிலிருந்தே அதனை மிகக் கடுமையாக நான் எதிர்த்தது அனைவரும் அறிந்ததே. அந்த எதிர்ப்புக்கான காரணங்கள் பல தருணங்களிலே வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் இச்சமயத்திலே மீண்டும் அவற்றை நினைவுபடுத்துவது நல்லது என்று நினைக்கின்றேன்.

1. கள யதார்த்தத்தின்படி இதில் வெற்றி பெற முடியாதென்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது.

2. அப்படியான சூழ்நிலையில் தேவையில்லாத இந்த விஷப் பரீட்சையை செய்து தோற்பதன் விளைவு என்ன?

3. தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷை இனியும் நிரூபிக்கப்பட வேண்டியதொன்றல்ல. அப்படியிருக்க இந்த நேரத்தில் இதைச் செய்வது எவரும் இதுவரை கேள்விக்குட்படுத்தாத எமது அரசியல் நிலைப்பாட்டை காட்டிக் கொடுப்பதாகவே இருக்கும்.

4. 2022 மக்கள் போராட்டத்தின் பின்னரான

06

லெபனானிலுள்ள

# இலங்கையருக்கு விசேட அறிவிப்பு

லெபனானுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான முரண்பாடு அதிகரித்து வரும் நிலையில் அங்குள்ள இலங்கையர்களுக்கு உதவும் வகையில் துரித தொலைபேசி இலக்கங்களை அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

லெபனானின் தெற்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் இஸ்ரேல் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் 492 பேர் கொல்லப்பட்டதுடன், 1,645 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் அங்குள்ள இலங்கைத் தூதரகம் துரித தொலைபேசி இலக்கங்களை அறிமுகம் செய்துள்ளது.

0096170386754 (சனத் பாலசூரிய முதலாவது செயலாளர்),

0096181549162 (பிரியங்கனி திஸாநாயக்க மூன்றாவது செயலாளர்),

0096181363894 (எம்.ஏ.எம். சாஹட் மொழிபெயர்ப்பாளர்)

ஜூலையில் 2.5 வீதமிருந்த

# பணவீக்கம் ஓகஸ்ட் மாதம் 1.1 வீதமாக குறைவடைவு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் இந்த ஆண்டு ஜூலை மாதம் 2.5 வீதமாகவிருந்த பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 1.1 வீதமாகக் குறைவடைந்துள்ளதாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தெரிவிக்கின்றது. குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2024 ஜூலை மாதத்துக்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் மாதாந்த நுகர்வோர் பணவீக்கத்தை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய ஜூலை மாதத்தில் 2.5 வீதமாக இருந்த பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 1.1 வீதமாகக் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜூலை மாதத்தில் 2.9 வீதமாக பதிவான உணவுப் பணவீக்கம் ஓகஸ்டில் 2.3 வீதமாகக் குறைவடைந்துள்ளது. அத்துடன், இந்த ஆண்டு ஜூலையில் 2.2 வீதமாக இருந்த உணவுப் பொருட்கள் அல்லாத வகை பணவீக்கம் ஓகஸ்டில் 0.2 வீதமாகக் குறைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

26 மாதங்களில் பெற்ற கடன்

# நாட்டு மக்கள் தினமும் 6.5 பில். ரூபாவுக்கு மேல் கடனாளி

## பேராதனை பல்கலை பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டை ஆட்சி செய்தவர்கள் கடந்த 26 மாதங்களில் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகையை நோக்கும்போது நாட்டு மக்கள் தினமும் 6.5 பில்லியன் ரூபா கடனாளிகளாக காணப்படுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் நாடு தற்போது கடும் கடன் நெருக்கடியில் சிக்கியுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அதனைக் கவனத்திற்கொண்டு புதிய ஜனாதிபதி, பொருளாதார மறுசீரமைப்புகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

"ஒவ்வொரு மாதத்திலும் எமது நாட்டு மக்கள் 196 பில்லியன் ரூபா கடனாளிகளாக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் நாம் ஒவ்வொரு நாளும் 6.5 பில்லியன் ரூபா கடனில் உள்ளோம்.

இவ்வாறான கடன்கள் காரணமாக நாடு தற்போது கடும் நெருக்கடியில் உள்ளது. அதேவேளை 2021ஆம் ஆண்டு நாட்டின் பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் பொருட்களின் விலைகள் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் சுமார் 106 வீதமாக அதிகரித்துள்ளது.

அத்துடன் உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் சேவை கட்டணங்கள் சுமார் 138 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

இத்தகைய பின்னணியில் நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் திருப்தியடைய முடியாது. புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி இந்த நிலைமைகளை சரியாக புரிந்து கொண்டு மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறுகிய காலத்தில் சில மறுசீரமைப்புகளை செயற்படுத்துவதன் அவசியம் காணப்படுகிறது. அதன் மூலம் மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைவதற்கு தேவையான பின்னணியை உருவாக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 09ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 21

## குறள் தரும் சிந்தனை



அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்

செல்வத்தை இலக்குமி என்றும், வறுமையை அவளது அக்காள் மூதேவி என்றும் வர்ணிப்பதுண்டு. பொறாமைக் குணம் கொண்டவனை அக்காளுக்கு அடையாளம் காட்டிவிட்டுத் தங்கை இலக்குமி அவனைவிட்டு அகன்று விடுவாள்.

# ஜனாதிபதித் தேர்தல் உணர்த்திய உண்மை

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலின் வாக்களிப்பு கடந்த 21 அம் திகதி நடைபெற்றது.

இத்தேர்தலை பிரசார காலத்திலும் வாக்களிப்பு தினத்தன்றும் அதற்கு பின்னரான தினங்களிலும் உள்நாட்டு வெளிநாட்டு சுயாதீன தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் கண்காணித்துள்ளன. அந்த வகையில் இக்கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு, தம் பணிகளை நிறைவு செய்யும் வகையில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தியுள்ளது.

அச்செய்தியாளர் மாநாட்டின் போது, 'இன, மத பேதங்களை மையப்படுத்தியதாகவோ பிரிவினைக்கு ஊக்குவிக்கும் வகையிலோ இத்தேர்தல் அமைந்திருக்கவில்லை. இது மிகவும் அமைதியாக நடைபெற்ற தேர்தலாக அமைந்துள்ளது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது தான் உண்மை. அண்மைக் கால வரலாற்றில் இந்நாடு பல தேர்தல்களை கண்டுள்ளது. அந்த தேர்தல்கள் அனைத்தில் இருந்தும் இத்தேர்தல் பெரிதும் வேறுபட்டதாக அமைந்திருந்தது. அத்தோடு கடந்த காலத் தேர்தல்களில் காணப்படாத சில பண்புகளை இத்தேர்தலில் விஷேடமாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவற்றில் வன்முறைகள் மிகவும் குறைவாக இடம்பெற்ற தேர்தலாகவும் அமைதியாக நடைபெற்ற தேர்தலாகவும் இத்தேர்தல் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இன, மத ரீதியிலான பேதங்களை மையப்படுத்தி பிரிவினையை ஊக்குவிக்காத தேர்தலாகவும் இத்தேர்தல் விளங்கியதும் சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும். இவை அனைத்துக்கும் வாக்காளர்களின் ஒத்துழைப்பும், தேர்தலை அமைதியாகவும் நேர்மையாகவும் நடாத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்த வேலைத்திட்டங்களுமே அடிப்படைக் காரணமாகும்.

கடந்த காலங்களைப் போலல்லாது இத் தேர்தலில் மக்கள் தெளிவான முடிவை எடுத்து செயற்பட்டனர். ஏனெனில் இனத்தையும் மதத்தையும் மையப்படுத்தி ஊக்குவிக்கப்படும் பிரிவினை எமக்கோ நாட்டுக்கோ நன்மை பயப்பவை அல்ல. அவை அற்ப அரசியல் இலாபம் தேடும் நோக்கிலான முயற்சிகள். இவற்றின் ஊடாக நாடும் மக்களும் தான் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதனால் அற்ப அரசியல் இலாபம் தேடும் நோக்கிலான இத்தகைய முயற்சிகளுக்கு கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் துணை போவதில்லை என இம்முறை தேர்தலுக்கு முன்னரே நாட்டில் பெரும்பாலான மக்கள் உறுதி பூண்டிருந்தனர். அதனால் வாக்களிப்பு தினத்தை எதிர்பார்த்தவர்களாக அவர்கள் காத்திருந்தனர். வாக்களிப்பு தினமானதும் தங்களது உறுதியான தீர்மானத்துக்கு அமைய வாக்களித்து தங்களது விருப்பதற்குரிய ஜனாதிபதியை தேர்ந்தெடுத்துள்ளனர்.

ஆனால் கடந்த காலங்களைப் போன்று இம்முறைத் தேர்தலிலும் ஒரு சில அபேட்சகர்களின் ஆதரவாளர்களும் பங்காளிக் கட்சிகளும் இனத்தையும் மதத்தையும் மையப்படுத்தி பிரிவினையை ஊக்குவிக்கும் வகையிலும் வாக்காளர்களை அச்சுறுத்தும் நோக்கிலும் பிரசாரங்களை முன்னெடுத்தன. அத்தகைய பிரசாரங்களைப் பெரும்பாலான மக்கள் நிராகரித்தனர்.

ஏனெனில் இத்தகைய பிரசாரங்களை முன்னெடுப்பவர்களின் நோக்கையும் இலக்கையும் வாக்காளர்கள் தெளிவாக அறிந்து கொண்டு செயற்பட்டதன் வெளிப்பாடே அது. இத்தேர்தல் முடிவும் அதனைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

கடந்த பொருளாதார வீழ்ச்சியின் போது நாடும் மக்களும் நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுத்த போது இத்தேர்தல் காலத்தில் இனத்தையும் மதத்தையும் மையப்படுத்தி பிரிவனையை ஊக்குவித்து அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளில் ஈடுபட்ட சில அரசியல் வாதிகள் நாட்டினதும் மக்களதும் துன்பங்களைக் கண்டும் காணாதது போல் நடந்து கொண்டனர்.

உதாரணமாக வாகனங்களின் பாவனையாளர்கள் நாட்கணக்கில் எரிபொருளுக்காக எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்துக் கிடந்த போது, இவர்கள் எவ்வித சிரமங்களின்றி அவற்றைப் பெற்றுக்கொள்ளவும், அதன் நிமித்தம் அவர்களுக்கு விஷேட கொடுப்பனவும் கூட அன்றைய ஆட்சியாளர்களால் ஏற்பாடு செய்து கொடுபெற்றுக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் பாவனையாளர்கள் நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருந்த சமயம் இத்தகையவர்கள், ஐந்து, பத்து என சமையல் எரிவாயு சிலிண்டர்களை தங்கள் இல்லங்களில் சேமித்து வைத்திருந்தனர். இன்னும் சிலர் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களில் மகிழ்ச்சியடைந்தனர். அதன் ஊடாக ஜனாதிபதி தேர்தலில் அற்ப அரசியலில் இலாபம் அடைந்து கொள்ளலாம் என எதிர்பார்த்திருந்தனர். இவை அனைத்தையும் மக்கள் தெளிவாக அறிந்து கொண்டனர். சந்தர்ப்பம் வரும் வரை பொறுமையாக இருந்தனர். அதற்கு இத்தேர்தல் முடிவு நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஆகவே இனத்தையும் மதத்தையும் மையப்படுத்தி பிரிவனையை ஊக்குவித்து அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளில் இனியும் ஏமாற முடியாது. அதற்கான திருப்புமுனையாகவே இத்தேர்தல் முடிவு அமைந்துள்ளது. அதுவே நாட்டில் பெரும்பாலானவர்களின் கருத்தும் ஆகும். இதே தெளிவுடன் வாக்காளர்கள் தொடர்ந்தும் செயற்படுவது இன்றியமையாததாகும். அதுவே சுபீட்சம் மிக்க தேசம் உருவாகவும் மக்கள் வளமான வாழ்வை பெற்றுக் கொள்ளவும் வழிவகுக்கும் எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# ஜனாதிபதித் தேர்தல் முடிவும் தமிழர் அரசியல் தரப்பின் தோல்வியுற்ற இராஜதந்திரமும்!

இலங்கையின் குடித்தொகையில் 70% இற்கும் அதிகமாக சிங்கள மக்கள் காணப்படும் நிலையில், 70% சிங்கள மக்களும் ஒன்றுபட்டு வாக்களித்தால், 50 வீதத்துக்கும் அதிகமான(74.9% X 70%) வாக்குகளை பெற்று சிறுபான்மையினரின் வாக்குகள் இன்றியே வெற்றி பெற முடியும்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினர் ஒற்றுமைப்பட்டு சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்திருந்தும், சிங்கள மக்களில் 70% ஆனோர் கோட்டாபயவுக்கு வாக்களித்ததால் அவரால் 50% இற்கு அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற முடிந்தது. ஆனால் வாக்குகள் மூன்றாக அல்லது நான்காகப் பிரியும் போது 60 வீதமான சிங்கள மக்கள் ஒன்றுபட்டு வாக்களித்தாலே வெற்றி பெற முடியும். அதுவே இம்முறை இடம்பெற்றுள்ளது. அதாவது சிங்கள மக்களின் 60% வாக்குகளை பெற்று மொத்த வாக்குகளில் 42% (60%X 70%) பெற்றுள்ள அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

சிதறடிக்கப்பட்ட தமிழர் வாக்குகள்:

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சில இடங்களில் அரியநேத்திரன் வெற்றி பெற்ற அதேவேளை, வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் சஜித் அதிகமான வாக்குகளைப் பெற்றிருப்பதும், ரணிலும் இரண்டாம் நிலையில் கணிசமான வாக்குகளை வடக்கு, கிழக்கில் பெற்றிருப்பதும் வடக்குகிழக்குத் தமிழர்கள் ஒரு குழப்ப நிலையில் பல கூறுகளாகப் பிரிவடைந்து வாக்களித்து இருப்பதைக் காட்டுகிறது.

ஆனால் மலையகத் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளிலும், இஸ்லாமியத் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளிலும் சஜித் வெற்றி பெற்றிருந்தாலும் இதே குழப்பநிலை இருப்பதை இம்முறை தேர்தல் பெறுபேறுகள் காட்டுகின்றன. அரசியலில் பழுத்த அனுபவமும் ஆற்றலும் மிகுந்த சுமந்திரன்



மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் சஜித்தை ஆதரிக்க எடுத்த முடிவு சாணக்கியமானதா என்பதை எதிர்காலம்தான் உணர்த்த வேண்டும்.

தமிழ் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட அரியநேந்திரன் யாழ்ப்பாணத்தில் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்த போதிலும், கிழக்கில் மூன்றாவது இடத்தை கூட பிடிக்க முடியாமல் அவருடைய சொந்த மாவட்டமான மட்டக்களப்பிலும் அண்டைய மாவட்டங்களான திருகோணமலையிலும் திகாமடுல்லவிலும் தோல்வி அடைந்துள்ளார்.

ஒருபோதுமே தேர்தலில் வெற்றி அடைந்திராமல் அரியநேத்திரன் பாராளுமன்றத்துக்கு வந்தவர் என்பது ஒருபுறமிருக்க, மக்கள் ஆதரவை ஒருபோதும் பெற்றிராத அரியநேத்திரன் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டது தவறு என்பதை தற்போதைய பெறுபேறுகள் வெளிக்காட்டுகின்றன.இந்நிலையில் தமிழர்களின் ஒற்றுமைக்கான சாயம் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வெளுத்து விடலாம் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்குத் தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமையாகச் செயற்பட்டு 20 ஆசனங்களையாவது பாராளுமன்றத்தில் பெற்றுக்கொண்டால், பேரம் பேசுவதன் மூலமாக அதிகளவு நன்மைகளை தமிழர்களால் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் பிளவடைந்து கிடக்கும் தமிழரசுக் கட்சி மற்றும் ஒவ்வொரு திசையில் செயற்படுகின்ற ஏனைய தமிழ்க் கட்சிகள் ஆகியவை ஒன்றுபட்டால் தமிழர்களுக்கு நன்மை கிடைக்குமென்பது உறுதி.

தேசிய மக்கள் சக்தி தனது பிரசாரங்களில் உறுதியளித்தவாறு அரசியலமைப்பு மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு அதற்கு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை அல்லது 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 150 பேரின் ஆதரவு தேவை. இரு மாதங்களில் வரவிருக்கும் தேர்தலுக்கு முன்னர் பல மாவட்டங்களில் மக்கள் ஆதரவைப் பெற்று அதிக ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டிய தேவை அக்கட்சிக்கு உள்ளது.

தென்னிலங்கை நிலைமை ஒருபுறமிருக்க, தமிழர்களின் ஒற்றுமையின்மை அவ்வினத்தின் மிகப்பெரிய பலவீனமாக மாறியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.



டொக்டர் முரளி வல்லிபுரநாதன்

# அல் ஜசீராவை முடக்கும் செயல்; இஸ்ரேலின் செயலுக்கு கண்டனம்!

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையில் உள்ள ரமல்லாவில் உள்ள அல் ஜசீராவின் அலுவலகத்தை இஸ்ரேலிய இராணுவம் வலுக்கட்டாயமாக மூடியதை பத்திரிகை சுதந்திரக் குழுவினரும் உரிமை ஆர்வலர்களும் கண்டித்துள்ளனர். இது பத்திரிகை மீதான கொடும் தாக்குதல் என்றும் கூறியுள்ளனர்.

காசாவில் இஸ்ரேலின் இராணுவத் தாக்குதல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறையினை பற்றி நீண்டகாலமாக அல் ஜசீரா விரிவான செய்திகளை வழங்கி வருகிறது.

இதுவரை காசாவில் போர் தொடங்கியதில் இருந்து நான்கு அல் ஜசீரா ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் முற்றுகையிடப்பட்ட பாலஸ்தீன பிரதேசத்தில் உள்ள அல்ஜசீரா அலுவலகம் பலமுறை குண்டுவீசித் தாக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் யுத்தம் தீவிரமாக தொடங்கியதில் இருந்து காஸாவில் மொத்தம் 173 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயினும் செய்தியாளர்களை குறிவைக்கவில்லை என்று இஸ்ரேல் கூறி வருகிறது.

ரமல்லாவில் உள்ள அல் ஜசீரா அலுவலகத்தை இஸ்ரேல் மூடியதை சர்வதேச பத்திரிகை அமைப்புகள் கண்டித்துள்ளன. பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு, ஆழ்ந்த அச்சம் இருப்பதாகவும், பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்க அழைப்பு விடுப்பதாகவும் கூறி உள்ளது.

22.9.2024 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, இஸ்ரேலிய வீரர்கள் கட்டாரை தளமாகக் கொண்ட அல்ஜசீரா பணியகத்தை சோதனையிட்டு அதை 45 நாட்களுக்கு மூட உத்தரவிட்டனர்.

ரமல்லா அலுவலகத்தில் இஸ்ரேலிய நடத்தையை 'கிரிமினல் விடயம்' என அல் ஜசீரா கண்டிக்கிறது. இது ஆக்கிரமிப்பு பற்றிய அல் ஜசீராவின் பார்வையை இஸ்ரேல் மௌனமாக்கும் முயற்சியாகும். தற்போது ரமல்லாவில் உள்ள அல் ஜசீரா அலுவலகத்தை இஸ்ரேலியப் படைகள் காலவரையற்று மூடியுள்ளன.

இஸ்ரேலிய நீதிமன்ற உத்தரவு அல் ஜசீராவை "பயங்கரவாதத்தை தூண்டுவதாகவும் ஆதரிப்பதாகவும்" உள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளது.

பத்திரிகையாளர்களை இவ்வாறு குறிவைப்பது உண்மையை அழிக்கவும், மக்கள் உண்மையைக் கேட்பதைத் தடுக்கவும் நோக்கமாக உள்ளது என்று அல் ஜசீராவின் பணியகத் தலைவர் வாலிட் அல்ஓமாரிக் கூறியுள்ளார்.

சர்வதேச பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு, இஸ்ரேலின் செயலை கடுமையாக கண்டித்து கூறியுள்ளது. அல் ஜசீராவை தணிக்கை செய்வதற்கான இஸ்ரேலின் முயற்சிகள், பிராந்தியத்தில் பல உயிர்களை பறித்த கொடும் போர் பற்றிய தகவலுக்கான பொதுமக்களின் உரிமையை கடுமையாக பாதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று அந்த அறிக்கை கூறியுள்ளது.





அல் ஜசீராவின் பத்திரிகையாளர்கள் இந்த நெருக்கடியான நேரத்திலும் திறமையாக பணியாற்றி உள்ளனர். எப்பொழுதும் அவர்களை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும் என சர்வதேச பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

எல்லைகளற்ற நிருபர்கள் (RSF) அல் ஜசீரா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தொடர் அழுத்தங்களை கண்டிக்கிறது என்றும் கூறியுள்ளது.

அத்துடன் பாலஸ்தீனிய பத்திரிகையாளர்கள் சங்கம், இஸ்ரேலின் தன்னிச்சையான இராணுவ முடிவை கண்டனம் செய்ததுள்ளது. இது பத்திரிகை பணி மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு எதிரான ஒரு புதிய ஆக்கிரமிப்பு என்றும் கூறியுள்ளது.

இஸ்ரேலிய அழுத்தங்களை நிறுத்துமாறு பத்திரிகையாளர்களின் உரிமைகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களை நாங்கள் அழைக்கிறோம் என்று பாலஸ்தீனிய பத்திரிகையாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

ரமல்லாவில் அல் ஜசீராவிற்கு எதிரான இஸ்ரேலிய நடவடிக்கையானது பத்திரிகை சுதந்திரத்தின் அப்பட்டமான மீறல்' என்று பாலஸ்தீனிய அதிகாரசபை கூறியுள்ளது.

காசாவில் இஸ்ரேலின் ஓராண்டு இராணுவத் தாக்குதல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறை பற்றி தெளிவாக அல் ஜசீரா விரிவான செய்திகளை வழங்கி வருகிறது.

காசாவில் போர் தொடங்கியதில் இருந்து நான்கு அல் ஜசீரா ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் முற்றுகையிடப்பட்ட பிரதேசத்தில் உள்ள அவர்களின் அலுவலகம் குண்டுவீசி தாக்கப்பட்டது. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் யுத்தம் தொடங்கியதில் இருந்து காஸாவில் மொத்தம் 173 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆயினும் செய்தியாளர்களை குறிவைக்கவில்லை என்று இஸ்ரேல் கூறுகிறது.

ஆயினும் இஸ்ரேலிய தகவல் தொடர்பு மந்திரி ஷ்லோமோ கர்ஹி, அல் ஜசீராவின் பணியகம் மூடப்பட்டதை நியாயப் படுத்தினார். காசாவின் ஹமாஸ் மற்றும் லெபனானின் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லாவின் ஊடகங்களை 'ஊதுகுழல்' என்று அழைத்தார்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# அனைத்துத் துறைகளிலும் துரித வளர்ச்சி அடைந்து வரும் நாடு சவுதி அரேபியா

உலகின் புதிய கண்டுபிடிப்புகள், படைப்புகளுக்கான ஆய்வுத்திறன் கொண்ட முதன்மை நாடுகளில் ஒன்றாக தன்னை வடிவமைத்துக்கொள்ளத் துடிக்கும் சவுதி சுகாதாரம், சுற்றுச் சூழலின் நிலைபேறான தன்மை, அடிப்படைத் தேவைகள், ஆற்றல் மற்றும் கைத்தொழில் துறை, எதிர்கால பொருளாதாரம் போன்றவற்றை முதன்நிலைப்படுத்தி தனது ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றது. இதை ஊக்குவிக்கும் வகையில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் ஆய்வு மாநாடுகளை பெரும் பொருட் செலவில் நடத்துகின்றது. இதன் ஓர் அங்கமாக 2012ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சர்வதேச ஆய்வு மையத்தின் 2025ஆம் ஆண்டுக்கான கூட்டத்தை சவுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

சவுதியின் பொருளாதாரம் எல்லாத் துறைகளிலும் அதிக அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. இம்முறை சவுதி தனது உற்பத்திகளின் மூலம் பெற்றுக்கொண்ட வருமானம் 2.959 ட்ரில்லியனாகும். இதில் 1.889 ட்ரில்லியன் பெற்றோலியம் தவிர்ந்த உற்பத்திகளால் கிடைக்கப் பெற்றதாகும்.

சுகாதார சேவைகளை பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துதல், சுகாதார சேவையின் தரத்தை மேம்படுத்துதல், அபாயகர நோய்களிலிருந்து பாதுகாப்பதை உறுதிப்படுத்துதல், பாதுகாப்பான போக்குவரத்தை சுகாதார ரீதியாக உறுதி செய்தல், மருத்துவ உற்பத்திகளில் ஈடுபாடு காட்டுதல் போன்ற பல இலக்குகளைக் கொண்டு சவுதி செயற்படுகின்றது.

முன்னெப்போதும் இல்லாத அளவு சவுதி தற்போது விவாசயத் துறையில் முன்னேறி வருகின்றது. சென்ற ஆண்டில் மாத்திரம் சுமார் 52 மில்லியன் பயன் தரும் மரக்கன்றுகள் சவுதியில் நடப்பட்டிருப்பதுடன், வடமேல் பகுதியில் 975 ஹெக்டெயர் நிலப்பரப்பினை விவசாயத்திற்காக ஒதுக்கியுள்ளதுடன் நாட்டின் பல பகுதிகளிலும் அரசாங்கமும் தனியார் துறையும் விவசாய உற்பத்திகளில் அதிக முன்னெடுப்புக்களை செய்துவருகின்றன.

உலகில் மின்சாரக் கார்களை உற்பத்தி செய்யும் ஐந்து நாடுகளில் ஒன்றாக தன்னை ஆக்கிக் கொள்ள சவுதி முயற்சிக்கின்றது. அதன்படி உலகின் முன்னணி வாகன உற்பத்தி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து, தனது நாட்டவர்களை அத்துறையில் பயிற்றுவிப்பதுடன் உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகின்றது.



தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியா அதனை அடியோடு இல்லாமல் செய்து புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை, நடுநிலை பேணல் போன்ற இஸ்லாத்தின் போதனைகளை பரப்ப அதிகம் முயற்சிக்கும் நாடாகவும் ஐ.எஸ்.ஐ.எஸ், அல் காயிதா போன்ற குழுக்களின் சிந்தனையில் உருவான பிற குழுக்கள் மற்றும் அனைத்து தீவிரவாத குழுக்களையும் தயவு தாட்சண்யமின்றி அதிக பட்ச தண்டனைகளை கொடுத்து இரும்புக் கரம் கொண்டு அடக்கிவரும் நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது.

தற்போதய நிலையில் உலக நாடுகளின் முன்னேற்றத்திலும் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதிலும் சுற்றுலாத் துறை மிகவும் முக்கியமான ஒன்றாகும். அதிலும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பது நாட்டின் அடுத்த துறைகளின் முன்னேற்றத்திற்கும் குறிப்பாக வணிகத் துறைக்கும் அதிகம் பங்களிப்புச் செய்யும் ஒன்றாகும்.

பாரிய நிதிச் செலவில் தற்போது ஸவுதியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நியோம், கித்தியா, திர்இய்யா ஆகிய அதி நவீன கிராமங்கள் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி அதிலிருந்து நாட்டின் பொருளாதாரத்



மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

2024 ஆம் ஆண்டில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி அதிகம் முன்னேறும் நாடுகளில் முதன்மை நாடாகவும், உலகளவில் அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் 14 வது நாடாகவும் மத்திய கிழக்கில் முதல் நாடாகவும் ஸவுதி அரேபியா தேர்வாகியிருப்பது இத்துறையில் சவுதி காட்டும் ஆர்வத்தையும் முன்னேற்றத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

கலாநிதி. M. B. M. இஸ்மாயில் (மதனி) Ph.D.

# பிரதமராக ஹரிணி நியமிக்கப்பட்டதால் இலங்கைக்கு சாதகமான விளைவுகள்

இலங்கையின் புதிய பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரிய நியமனம் செய்யப்பட்டுள்ளார். 1947 முதல், சுதந்திர இலங்கை பதினைந்து பிரதமர்களால் வழிநடத்தப்பட்டது. அவர்களில் இருவர் மட்டுமே பெண்கள். மூன்று முறை பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க பதவி வகித்திருந்தார். அவரது மகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பிரதமராகப் பதவியில் இருந்தார். அதன்படி, இந்த நியமனத்தின் மூலம் ஹரிணி அமரசூரிய இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமராகிறார்.

ஒரு விஞ்ஞானியாக, அவர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பணியாற்றுவார் என்று எதிர்பார்க்கலாம். அரசியல் பிளவுகளைக் குறைப்பதில் அவரது பங்களிப்பும் தலைமைத்துவமும் முக்கியமானதாக இருக்கும். இது நாட்டின் நீண்ட கால ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு முக்கியமானதாக இருக்கும். தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதை ஊக்குவிக்கும்.

கலாநிதி அமரசூரிய அரசாங்கத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் வலுவான ஆதரவாளர் ஆவார். அவரது தலைமையானது ஊழலுக்கு எதிரான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் என்பது உறுதி.

சமூக நீதிக்கான ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் கலாநிதி அமரசூரிய மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள் மற்றும் வளங்கள், வாய்ப்புகளுக்கான சமமான அணுகலை வலியுறுத்தும் சீர்திருத்தங்களைத் தொடங்க முடியும்.



கலாநிதி ஹரிணி அமரசூரிய பிரதமராக நியமிக்கப்பட்டமை இலங்கை அரசியலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தக்கூடும். தேசிய மக்கள் சக்தி பாரம்பரிய அரசியல் கலாசாரங்களால் புறக்கணிக்கப்பட்ட நீண்டகால சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தயாராக இருப்பது தெரிகிறது. இந்த நடவடிக்கை சில முக்கியமான கலாசார மற்றும் அரசியல் மாற்றங்களை பிரதிபலிக்கிறது என்பதை தனித்தனியாக பார்க்க முடியும்.

**1. பெண்களின் தலைமைத்துவத்தின் சின்னம்:**

பாரம்பரிய இலங்கை சமூகத்தில், தாய் பெரும்பாலும் குடும்பம் மற்றும் சமூக வாழ்க்கையில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிக்கிறார், ஒரு தார்மீக மற்றும் நடைமுறை தலைவராக பணியாற்றுகிறார். கலாநிதி ஹரினி அமரசூரியவின் நியமனம் பெண்களின் தலைமைத்துவத்திற்கான இந்த கலாசார மரியாதையை பிரதிபலிக்கிறது. ஆண் ஆதிக்க அரசியல் சூழலில் இருந்து பிரிந்து பரந்த பாலின சமத்துவம் மற்றும் உயர் மட்டங்களில் முடிவெடுப்பதில் பெண்களின் பங்கேற்பு ஆகியவற்றை ஏற்றுக்கொள்வதற்கு அவரது தலைமை நாட்டை ஊக்குவிக்கும்.



**2. பாரம்பரிய அரசியல் கலாசாரத்திலிருந்து விலகுதல்:**

இலங்கையின் அரசியல் நீண்டகாலமாக நிறுவப்பட்ட அரசியல் குடும்பங்கள் மற்றும் வேரூன்றிய அதிகார அமைப்புகளால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி, இந்த நியமனத்தின் மூலம், அந்த கடந்த காலத்திலிருந்து விடுபடுவதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்த முடியும். பரம்பரை அரசியலில் இருந்து விடுபட்டு, திறமையும், புதிய சிந்தனையும் கொண்ட மக்கள் நிறைந்த அரச கட்டமைப்பை உருவாக்க முடியும்.

கலாநிதி அமரசூரிய போன்ற ஒருவரைப் பிரதமராக்க தேசிய மக்கள் சக்தி எடுத்த முடிவு, இந்தப் பிரச்சினைகளைக் கையாள்வதில் அவர்கள் தீவிரமாக இருப்பதையே காட்டுகிறது.

***3. ஒரு முற்போக்கான சமூக நிகழ்ச்சி நிரல்:***

தேசிய மக்கள் சக்தி மேடை பெரும்பாலும் சமத்துவம், சமூக நீதி மற்றும் வெளிப்படைத்தன்மையை மையமாகக் கொண்டுள்ளது. கலாநிதி அமரசூரியவின் நியமனம், இலங்கையின் தீர்க்கப்படாத இனவாத பதற்றங்கள், சமத்துவமற்ற செல்வப் பகிர்வு, மோசமான கல்வி உட்கட்டமைப்பு மற்றும் விளிம்புநிலை சமூகங்களுக்கு வாய்ப்புகள் இல்லாமை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முற்போக்கான நிகழ்ச்சி நிரலுக்கு கட்சி உறுதிபூண்டுள்ளது என்ற கருத்தை வலுப்படுத்துகிறது.

**4. ஒரு புதிய அரசியல் கலாசாரம்:**

கலாநிதி அமரசூரியவின் தலைமைத்துவத்தினால் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க முடியும். அது பிரச்சனைகளைத் தீர்ப்பது, உள்ளடக்கிய தன்மை மற்றும் மக்களுக்கு முதல் அணுகுமுறை ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துகிறது. முன்னைய ஆட்சிகளின் அடிக்கடி கொடுக்கல் வாங்கல் மற்றும் சுய சேவை இயல்புக்கு எதிராக இலங்கை அரசியலில் ஒரு அறிவுசார் மற்றும் தார்மீக பரிமாணத்தை கொண்டு வரக்கூடிய ஆற்றல் அவருக்கு உள்ளது.

கலாநிதி ஹரினி அமரசூரியவின் நியமனத்தின் மூலம் தேசிய மக்கள் சக்தி, பாரம்பரிய அரசியல் கலாசாரத்திலிருந்து முறித்துக் கொள்வதையும், நீண்டகால சமூகப் பிரச்சினைகளை அர்த்தமுள்ள வகையில் தீர்க்கும் நோக்கத்தையும் சமிக்ஞை செய்வதாகத் தெரிகிறது.

கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தனிப்பட்ட பின்னணி எடுத்துக்கொண்டால் இலங்கையின் ஒரு முக்கிய கல்வியாளர், செயற்பாட்டாளர் மற்றும் அரசியல்வாதி ஆவார், சமூக நீதி, மனித உரிமைகள் மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் ஆகியவற்றிற்காக அவர் ஆஜரானதாக அறியப்பட்டவர்.

அவரது கல்விப் பின்னணியைப் பொறுத்தவரை, அவர் ஒரு பிரிட்டிஷ் பல்கலைக்கழகத்தில் சமூக மானுடவியலில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார். அங்கு அவர் சமூகவியல், மானுடவியல் மற்றும் சமூக அமைப்பு ஆய்வுகளில் கவனம் செலுத்தினார். அரசியலுக்கு வருவதற்கு முன்னர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூகக் கற்கைகள் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றினார். அவரது கல்விப் பணி இளைஞர்கள், கல்வி மற்றும் சமூக நீதி பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிறது. அவரது ஆராய்ச்சி குழந்தைகள் உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் நிர்வாகத்தில் சிவில் சமூகத்தின் பங்கு போன்ற தலைப்புகளை ஆராய்ந்துள்ளது. சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் பாலின சமத்துவத்திற்கான தீவிர வழக்கறிஞர். மேம்பாடு, மனித உரிமைகள் மற்றும் மோதல் தீர்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் அவர் பணியாற்றியுள்ளார். இலங்கையில் விளிம்புநிலை சமூகங்களுக்கு சமூக மற்றும் அரசியல் வலுவூட்டலின் முக்கியத்துவத்தை அடிக்கடி வலியுறுத்தும் அடிமட்ட செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

கலாநிதி அமரசூரிய, இடதுசாரி அரசியல் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவுடன் (ஜேவிபி) இணைந்த தேசிய மக்கள் சக்தி இயக்கத்தில் இணைந்து அரசியலில் நுழைந்தார். அவர் 2020 பாராளுமன்றத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பாராளுமன்றத்தில், கொள்கைப் பிரச்சினைகள், குறிப்பாக கல்வி, நிர்வாகம் மற்றும் சமூக சீர்திருத்தம் ஆகியவற்றில் அவரது பேச்சுத்திறன் மற்றும் அர்ப்பணிப்புக்காக அவர் விரைவில் அங்கீகாரத்தை பெற்றார். அவரது முயற்சிகள் மிகவும் நியாயமான, வெளிப்படையான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய சமுதாயத்தை மேம்படுத்துவதில் தொடர்ந்து இணைந்துள்ளன. கல்வி மற்றும் இளைஞர் வலுவூட்டலில் சீர்திருத்தங்கள், இலங்கையின் இளைஞர்களின் தேவைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் எதிர்காலத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்தும் கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுப்பது போன்றவற்றுக்கு அவர் வலுவான ஆலோசகராக இருந்து வருகிறார்.

கலாநிதி அமரசூரிய தனது சிந்தனைமிக்க அணுகுமுறை, அறிவார்ந்த கடினத்தன்மை மற்றும் பின்தங்கியவர்களை உயர்த்துவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக அரசியல் வட்டாரங்களுக்குள்ளும் வெளியேயும் மதிக்கப்படுகிறார். அவர் இலங்கை அரசியலில் ஒரு முற்போக்கான குரலாகக் கருதப்படுவதோடு, நாட்டில் நேர்மறையான சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை பாதிக்கும் திறனுக்காகவும் அங்கீகரிக்கப்பட்டவர்.

**அநுருந்த லொகுஹபுஆரச்சி**
**(தமிழில்: வீ.ஆர்.வயலட்)**

## நகர்வலம்



# சமூகத்தை ஏமாற்றும் முஸ்லிம் கட்சிகளை முஸ்லிம்கள் இத்தேர்தலில் நிராகரித்துள்ளனர்

**உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத்**

இருபது வருடமாக முஸ்லிம் சமூகத்தை தேர்தலுக்கு மட்டும் பயன்படுத்தி எந்த உரிமையையும் பெற்றுத்தராத சமூகத்தை ஏமாற்றும் முஸ்லிம் கட்சிகளை முஸ்லிம்கள் ஒன்று பட்டு நிராகரிக்காத வரை முஸ்லிம் சமூகம் அரசியலில் வெற்றிபெற முடியாது என உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஒரு உறையில் இரண்டு வாள்கள் இருப்பது தவறு என ரிசாத் பதியுதீனுக்கு பகிரங்கமாக சொன்னோம். ஹக்கீம் இருக்கும் பக்கம் இருப்பது பிழை என்றும் அரசியல் சாணக்கியம் பற்றிய அறியாமை என்றும் சொன்னோம்.

இப்போது இரண்டு பெரிய முஸ்லிம் கட்சிகள் ஆதரித்தும் சஜித் பிரேமதாச தோற்றதன் மூலம் இந்த இரு ஏமாற்று கட்சிகளும் இருக்கும் பக்கத்தை ஆதரிப்பதில்லை என்ற சிங்கள மக்களின் முடிவு தெளிவாகியுள்ளது. இதையே கடந்த 2019 தேர்தலிலும் காட்டினர்.



அதிலும் தமிழ் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கிறதோ அவர் படுதோல்வி அடைவார் என்பதும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தமிழ் கூட்டமைப்புடன் சஜித் பிரேமதாச இணைந்தது மிகப்பெரிய தவறு.2010ம் ஆண்டு தேர்தலில் சம்பந்தன் சரத் பொன்சேக்காவுக்கு ஆதரவு தெரிவித்த போது அடித்துச் சொன்னேன் மஹிந்தவின் வெற்றி உறுதியாகிவிட்டது என.

அத்தேர்தலில் ஆடையின்றி நிற்கும் முஸ்லிம் சமூகத்துக்குரிய கோவணம் சரத் பொன்சேக்கா என ஹக்கீம் கூறினார். பின்னர் கோவணத்தையும் இழந்து நின்றார்.

ஆகவே இருபது வருடமாக முஸ்லிம் சமூகத்தை தேர்தலுக்கு மட்டும் பயன்படுத்தும் சமூகத்தை ஏமாற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அ.இ. மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகளை முஸ்லிம்கள் ஒன்று பட்டு நிராகரிக்காத வரை முஸ்லிம் சமூகம் அரசியலில் வெற்றிபெற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அநுர குமாரவின் வெற்றியை ஏற்றுக்கொள்கின்றோம்

**பிரபா கணேசன் தெரிவிப்பு**

ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள அநுர குமார திசாநாயக்கவின் வெற்றியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றோம். ஜனநாயக மக்கள் காங்கிரஸ் சஜித் பிரேமதாசவை ஆதரித்தாலும் கூட மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

அது நிறைவேறி இருக்கின்றது. இருப்பினும், அவர்களுடன் இணைந்து செயல்பட நாங்கள் தயாராக இருக்கின்றோம் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

நாட்டில் இதுவரை காலமும் இடம்பெற்ற ஊழல் துஷ்பிரயோகம் நேர்மையற்ற அரசியல்வாதிகளின் நடத்தை காரணமாகவே இன்று மக்கள் தெளிவாக வாக்களித்துள்ளார்கள். ஜனாதிபதி அநுர குமாரவின் விடாமுயற்சி காரணமாகவே அவர் இந்த வெற்றியை பெற்றுள்ளார்.



இனி, எதிர்வரும் காலங்களில் ஊழல் அற்ற ஒரு நாட்டை அவர் கட்டி எழுப்புவார் என்ற நம்பிக்கையை எனக்கு கொடுத்துள்ளது. இருப்பினும் சிறுபான்மை மக்களுக்காக அவர் செயல்படுவார் என்று எதிர்பார்க்கின்றோம். அதேபோல் மலையக மக்களின் பிரச்சினைக்கு முதலிடம் கொடுப்பார் என்ற நம்பிக்கையும் எமக்குள்ளது.

வட, கிழக்கு மக்களின் அரசியல் தீர்வுக்கும் நிரந்தர தீர்வை வழங்குவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. சிறுபான்மை மக்கள் சம்பந்தமாக அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவாற்றுவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

இதைத் தொடர்ந்து வரப்போகும் பொதுத் தேர்தலில் அவருக்கு எமது மக்கள் ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். மாற்றம் என்பது நாட்டுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் தேவைப்படுகிறது. கடந்த காலங்களில் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பாக செயல்படாததை தேர்தல் முடிவு தெரிவிக்கின்றது. கடந்த கால கசப்புகளை மறந்து புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

## கொழும்புத் தமிழ் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினரும் றோயல் கல்லூரியின் ஓய்வுநிலை பிரதி அதிபருமான மாரிமுத்து கணபதிப்பிள்ளையின் தலைமையில் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் "தமிழியல் சிந்தனையும் தனிநாயகம் அடிகளாரும்'' எனும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியக்குழுச் செயலாளர் தெ. மதுசூதனன் உரை நிகழ்த்தவுள்ளார்.




மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் கல்விசார் அபிவிருத்தி திட்டங்கள், மாணவியரின் சில விளையாட்டு திறனை மேம்படுத்தல், ஆசிரியைகளுக்கான ஓய்வறை நிர்மாணித்தல் போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் இப்பாடசாலையின் பழைய மாணவியர் சங்கத்தினரால் எதிர்வரும் ஆண்டுக்கான கலண்டர் விநியோகத்தை கல்லூரி அதிபர் ஏ.எல்.ஏ. ரஹ்மான் அவர்களிடம் வழங்கி ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையால் ஜனாதிபதிக்கு பாராட்டும் வாழ்த்தும்

இலங்கைத் திருநாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் அநுரகுமார திசாநாயக்கவுக்கு சைவத்தமிழ் மக்கள் சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றோம்.

இன, மொழி, சமய வாதங்களைத் துறந்து, மக்கள் பணியையே முன்வைத்து அரசியல் கருத்துருவாக்கம் செய்து, இலங்கை மக்களின் மனதை வென்று ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் புது அரசியல் வரலாற்றை தாங்கள் இலங்கையில் ஏற்படுத்தியிருப்பது இலங்கைத் திருநாட்டிற்குப் பெருமையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் தேசிய வீரர்களில் ஒருவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் திருப்பெயரில் அவருடைய சிந்தனைகளை மக்கள் மயப்படுத்தி, வளமான சுதேசியப் பண்பாட்டுடன் சீரும் சிறப்புடன் இயங்கும் இலங்கைத் திருநாட்டினைக் கட்டமைப்பதில், சமய அமைப்பு எனும் பொறுப்புணர்வுடன் எமது சபை பலதசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றது. அந்த வகையில், தங்களுடைய தலைமையில் இலங்கைத் திருநாடு பயணிப்பதில் நாம் பெருமையடைகின்றோம். நேர்மையானதும், அனைத்து இன, மொழி, சமய மக்களுக்கும் பொதுவானதும், ஊழலற்றதும், மனித உரிமைகளைப் பேணுவதுமான சிறந்ததொரு நிர்வாக ஆட்சியைத் தங்களின் தலைமையில் இலங்கைத் திருநாடு பெற்றுக் கொள்ளும் என்று நாட்டு மக்கள் மிகவும் நம்பிக்கையோடு எதிர்பார்த்துள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் விவகாரம்

# விசாரணையின் இறுதியில் நியாயமான தீர்வு வழங்கப்படும்

## கைதான NIE பணிப்பாளருக்கு ஒக். 07 வரை விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பில் விசாரணையின் பின்னர் நியாயமான தீர்வு வழங்கப்படும் என கல்வியமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மேற்படி விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த விசாரணைகளின் முடிவுகளை கவனத்திற்கொண்டு மீண்டும் புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் விரைவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணையின் பின்னர் நியாயமான தீர்வு வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ள கல்வி யமைச்சின் செயலாளர், புலமைப்பரிசில் பரீட்சையில் 3 வினாக்கள் கசிந்த சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் திணைக்களப் பணிப்பாளர் எதிர்வரும் ஒக்டோபர் 07 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

## கலாநிதி ஹரிணி...

மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்த தற்போதைய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், அதற்காக அனைவரது அர்ப்பணிப்பையும் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் திருமதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமரின் செயலாளர் ஜி. திரு.பிரதீப் சபுதந்திரியும் பிரதமர் செயலகத்தில் தனது பணியைத் தொடங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதமரின் மேலதிக செயலாளர்களான ஹர்ஷ விஜேவர்தன, மஹிந்த குணரத்ன, சிரேஷ்ட உதவி செயலாளர் டி மஷங்க எச் லியனகே மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

## புதிய ஜனாதிபதி, அரசாங்கத்துடன்...

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் அறிக்கை ஒன்றின் மூலம் இந்த தகவலை தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்புடன் இலங்கையானது தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து இயல்பு நிலைக்கு திரும்புகிறது. இவ்வாறான சூழ்நிலையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது . அந்த வகையில் புதிய அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் பணியாற்ற தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மூன்றாவது மீளாய்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி அநுரகுமாரவிடம்...

மேலும் அவர் தெரிவிக்கையில், "ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் பதவி ஏற்றுள்ளார். அவருக்கு வாழ்த்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொது கட்டமைப்பாக சிவில் அமைப்புகளும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து புதிய வேட்பாளராக என்னை நிறுத்தி மக்கள் மத்தியில் ஆதரவை பெற்றுத்தந்த நிலையில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் எனக்கு கிடைத்துள்ளன. அதற்கு இந்த மக்களுக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இலங்கை வரலாற்றில் ஒரு தமிழர் என்ற வகையில் அதிகூடிய வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள்.

அதில் இரண்டாவதாக நாங்கள் பார்க்க வேண்டியிருப்பது இணைந்த வடக்கு, கிழக்கில் மக்கள் உறுதியாக இருக்கின்றார்கள். இணைந்த வடக்கு, கிழக்கே தமிழர்களின் அரசியல் தீர்வு என்பதனை இந்த தேர்தல் வெளிக்காட்டி இருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் பிரிந்திருந்தாலும் கருத்து முரண்பாடுகள் காரணமாக சில பிரசாரங்களை மேற்கொண்டாலும் கூட இனிவரும் காலங்களில் அந்த முரண்பாடுகளை தவிர்த்து பாராளுமன்ற தேர்தலில் ஒரு குடையின் கீழ் ஓர் அணியில் ஒரு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய மக்கள் கூட்டணியின்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் நடைபெற்றுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சிக் கூட்டத்தில் அதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஒன்றாக இணைந்து கூட்டாக செயற்படப் போவதாக பல்வேறு தரப்புகளிலிருந்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தனக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எத்தகைய இணைப்பும் கிடையாது என்றும் அதற்கான வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட எதிர்க்கட்சித் தலைவர், அந்த தேர்தலின் பெறுபேறுகளுக்கு அமைய இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு தோல்வியைத் தழுவியமை குறிப்பிடத்தக்கது.

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு...

தேவைப்படும். அனைத்து இலங்கையர்களையும் குறிப்பாக, எங்களில் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களை மேம்படுத்துவதற்கு நீங்கள் செயற்படும் போது உங்களது செயற்பாடுகளை காண ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்றார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் மிகவும் கடினமான காலகட்டங்களில் உங்களது நிலையான தலைமைத்துவம் விலைமதிப்பற்றது. உங்கள் முயற்சிகள் எங்கள் தேசத்தின் மீட்சிக்கான அடித்தளத்தை அமைத்துள்ளன. நீங்கள் வழங்கிய சேவைக்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தலை நாங்கள் இப்போதுதான் முடித்துள்ளோம் என்பது சுதந்திரமான அமைப்புகளை உருவாக்குவதற்கும் நமது துடிப்பான ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் நீங்கள் ஆற்றிய பணிக்கு சான்றாகும்.

உங்கள் அமைச்சரவையில் பணியாற்றியதில் மிகவும் பெருமை கொள்கிறேன்.

உங்கள் தைரியம் மற்றும் தலைமைத்துவத்துக்காக வரலாறு நீண்ட காலமாக உங்களை போற்றிப் பேசும்.

இலங்கையின் வரலாற்றில் இந்த புதிய அத்தியாயத்தில் நாம் நுழையும் போது, மக்களுக்கு சேவை செய்வதிலும், வளமான மற்றும் ஐக்கிய இலங்கையை உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதிலும் நான் உறுதியாக இருக்கிறேன்" என அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொது தேர்தலை நடத்துவதற்கு...

ஆரம்பிப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக இதுவரையில் தொடர்பு கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார். இருப்பினும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் வேட்பாளர்களுக்கான வேட்புமனுக்கள் 7 முதல் 17 நாட்களுக்குள் கோரப்பட வேண்டும். அதன் பின்னர் ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிக்கையில், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தேவையான பணம் ஜனாதிபதியால் ஒதுக்கப்படும் என்றும் கூறினார்.

## சீர்திருத்தங்களுக்கு...

பேரில், தேர்தல் செயல்முறையின் அனைத்து அம்சங்களையும் சுயாதீனமான, பாரபட்சமற்ற மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டை மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினால் முடிந்துள்ளதாக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது நல்லாட்சி மற்றும் ஜனநாயகம் தொடர்பாக இலங்கையுடனான ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கமான ஒத்துழைப்பை மேலும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஆரம்ப அறிக்கையில் அடிப்படை சுதந்திரங்கள் பரந்த அளவில் மதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை தேர்தல் ஆணைக்குழு தேர்தலில் அனைத்து முக்கிய கட்டங்களிலும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் சுதந்திரமாகவும் உறுதியுடனும் நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளது. அதேவேளை முன்னேற்றம் தேவைப்படும் விடங்களையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு அடையாளம் கண்டுள்ளது. குறிப்பாக, அரசியல் நிதியில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் பொது மற்றும் அரசியல் வாழ்க்கையில் பெண்களின் பங்கேற்பை மேம்படுத்துவதற்கு எதிர்கால தேர்தல் செயல்முறையில் மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை கொண்ட இறுதி அறிக்கையை ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு வெளியிடும் என்றும் பேச்சாளர் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கியமான மற்றும் மதிப்புமிக்க பங்காளி இலங்கை. நல்லாட்சி, மனித உரிமைகள் ஆகியவற்றில் ஐரோப்பிய ஒன்றியத்தின ஒத்துழைப்பு எப்பொழுதும் இலங்கைக்கு உண்டு. சட்டவாட்சி வர்த்தகம் மற்றும் முதலீட்டு முதலானவற்றிலான நல்லுறவு மேலும் தொடரும்.

இதேபோன்று காலநிலை மாற்றத்தை எதிர்த்து போராடுவதற்கும் பசுமை மாற்றத்தை ஊக்குவிப்பதற்குமான ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டு நடவடிக்கை ஜனநாயக விழுமியங்களுக்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அனைத்து மாகாணங்களின்...

இராஜினாமாச் செய்துள்ளதுடன் நேற்றையதினம் வடமாகாண ஆளுநர், மேல் மாகாண ஆளுநர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரும் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

வட மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது இராஜினாமா கடிதத்தை நேற்று முன்தினம் அனுப்பி வைத்ததாக ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அதேபோன்று நேற்றையதினம் மேல் மாகாண ஆளுநர் விமானப்படை மார்ஷல் ரொஷான் குணதிலக புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தமது இராஜினாமா கடிதத்தை அனுப்பியுள்ளார்

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளதையடுத்து நாட்டின் பிரதமர், அமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்களென பல உயர் பதவிகளில் உள்ளோர் தமது பதவிகளை இராஜினாமா செய்து வருகின்றனர்.

அதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள் உட்பட அனைத்து மாகாணங்களினதும் மாகாண ஆளுநர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க, தென்மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அகமட், ஊவா மாகாண ஆளுநர் அநுர விதானகே, மேல் மாகாண ஆளுநர் விமானப்படை மார்ஷல் ரொஷான் குணதிலக, வடமாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ், மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரே தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

இவர்களின் இராஜினாமா தொடர்பில் நேற்று அரசாங்க வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

## தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்...

பெண் பிரதமராகவும் பதவியேற்றுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரிய, நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை மற்றும் தொழில், கல்வி, சுகாதாரம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம், மகளிர், சிறுவர்கள், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை, வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி ஆகிய அமைச்சுகளின் அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

அத்துடன் வெளிவிவகாரம், பொதுமக்கள் பாதுகாப்பு, புத்தசாசனம், மத, கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து, சுற்றாடல், வன ஜீவராசிகள், வன வளங்கள், நீர்வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சராக தேசிய மக்கள் சக்தியின் பிரசார செயலாளரான விஜித ஹேரத் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

மேற்படி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாரச்சி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, பிமல் ரத்நாயக்க, டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ, வசந்த சமரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எச். எஸ்.சம்பத் துய்யகொந்த உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## இன்றைய பலன்கள்

(25.09.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
உத்தியோகத்தில் பின்னர் செய்யலாம் என நினைத்த வேளையை உயரதிகாரிகளின் விருப்பப்படி உடனே செய்ய வேண்டிய நிர்பந்தம் உருவாகும்.

**ரிஷபம் :**
உத்தியோகத்தில் உயர் அதிகாரியின் ஆதரவுடன் பல நன்மைகளைப் பெறுவீர்கள். சிலருக்கு வரவேண்டிய அலுவலக கடன் கிடைத்து பாதியில் நின்ற பணிகளைத் தொடர்வீர்கள்.

**மிதுனம்:**
சிலருக்கு எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும் .

**கடகம்:**
உத்தியோகத்தில் வேலைபழு அதிகரிக்கும். சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டியது இருக்கும்.

**சிம்மம்:**
உத்தியோகத்தில் வேலைபழு அதிகரிக்கும். பதிவேடுகளை பாதுகாப்பின்றி வைத்துவிட்டு தேவையான சமயத்தில் கிடைக்காமல் தொல்லைப்படை நேரிடும்.

**கன்னி:**
சொந்தத் தொழிலில் புதிய வாடிக்கையாளர்களால் அதிக வேலை வந்து சேரும். கூட்டுத் தொழிலில் வியாபாரம் நன்கு நடைபெறும்.

**துலாம்:**
வீண் வாதங்களால் சக பணியாளர்களிடம் மன வேறுபாடு உருவாகும். சொந்த தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளர்களின் பணியை விரைந்து செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் பணிகளில் ஏற்பட்ட குறையை நிவர்த்தி செய்ய நேரிடும். அதன் பொருட்டு கால நேரம் அதிகரிக்கலாம்.

**தனுசு:**
சிலருக்கு இருக்கும் இடத்திலேயே பொறுப்புகள் கிடைக்கக்கூடும். சொந்த தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளர்களின் மூலமாக தொழில் முன்னேற்றத்தை அடைவார்கள்.

**மகரம்:**
சிறிய குறையும் பெரிதாக கருதப்படும். உயர் அதிகாரிகளின் கோபப்பார்வைக்கு ஆளாக நேரிடும்.

**கும்பம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன் தொகை கிடைத்து மகிழ்ச்சிப்படுத்தும். சக பணியாளர்களின் குடும்ப விஷயங்களில் தலையிடுவது பிரச்சனைகளை உருவாக்கும்.

**மீனம்:**
சொந்தத் தொழில் செய்பவர்கள் முதலில் செய்து கொடுத்த வேலையில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய சூழல் உருவாகும்.

## அரியநேத்திரனை தமிழ்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இன்றைய சூழ்நிலையில் சிங்கள பௌத்த இனவாதம் மிகவும் கீழ்நிலையை அடைந்துள்ளது. பிரதான வேட்பாளர் ஒருவர் கூட இனவாதத்தை தூண்டாத விதத்தில் நாம் அவர்களோடு பேரம் பேசுவதற்கான வாய்ப்பு அதிகரித்திருக்கிறது.

5. இரண்டு பிரதான வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற தருணத்தை விட மூன்று பேர் வெற்றி வாய்ப்புள்ளவர்களாக காணப்படும் போது எமது பேரம் பேசும் சக்தி பன்மடங்காக அதிகரித்துள்ளது.

6. இப்படியான அருமையான சந்தர்ப்பங்களை நழுவவிடாமல் எமது மக்கள் நலன் சார்ந்து எமக்கு எஞ்சியிருக்கின்ற ஒரே பலமான வாக்குரிமையை பேரம் பேசி பயன்படுத்துதல் வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சி எத்தருணத்திலும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துகிற முயற்சியில் பங்கெடுக்கவில்லை. மாறாக பிரதான வேட்பாளர்கள் மூவரோடும் கட்சியின் முடிவின்படி உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். எமது கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒருவரைத் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்திய போது அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பித்து, அவருக்கு சார்பாக பிரசாரம் செய்யும் எமதுகட்சி உறுப்பினர்களை எச்சரித்தோம். பிரதான வேட்பாளர்கள் மூவரினதும் தேர்தல் அறிக்கைகள் வெளிவந்தவுடனேயே எமது மத்திய செயற்குழு கூடி அவற்றை ஆராய்ந்தது. இந்த விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்த ஐந்தாவது கூட்டம் 01.09.2024 அன்று வவுனியாவில் கூடி பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

1. தமிழ்ப் பொது வேட்பாளராக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பா.அரியநேத்திரனுக்கு நாம் ஆதரவளிப்பதில்லை.

2. தேர்தலிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அரியநேத்திரனைக் கோருவது.

3. ஜனாதிபதி தேர்தல் 2024 இல் இலங்கை தமிழரசுக்கட்சி சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பது.

எமது கோரிக்கைக்கு அமைவாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் வாக்களித்ததன் காரணமாக ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் திரு. சஜித் பிரேமதாச வெற்றி பெற்றிருக்கின்றார். வடக்கு, கிழக்கிலே அண்ணளவாக 80 வீதத்தினர் நாம் அடையாளம் கண்ட மூன்று பிரதான வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இது எமது கட்சி எடுத்த நிலைப்பாட்டிற்கான மாபெரும் அங்கீகாரம்

மாறாக அரியநேத்திரனுக்கு வடக்கு, கிழக்கில் 14 வீதம் குறைவாகவே வாக்குகள் கிடைத்துள்ளன. இனிமேலும் இவ்விதமான விபரீத விளையாட்டுக்களில் ஈடுபட வேண்டாம் என்று தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோரிடம் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய தேசிய கட்சி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான ஆசனங்களை வெற்றி கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அவர் கட்சியின் முக்கியஸ்தர்களை கேட்டுக் கொண்டார்.

## பாராளுமன்ற தேர்தலில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

தள்ளப்பட்டு படுதோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை எதிர்வரும் பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து பெரும் அணியாக தேர்தலில் அவர் களமிறங்கப் போவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திணைக்களங்களை வினைத்திறனாக...

நேற்று முன்தினம் (23) தனது கடமைகளை பொறுப்பேற்ற போதே அமைச்சின் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பொலிஸ், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்களை பதிவு செய்வதற்கான செயலகம் என்பன பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




# மலையகத்தில் அதிகரிக்கும் குளவிக் கொட்டு சம்பவங்கள்

**மஸ்கெலியா தினகரன் நிருபர்**

மலையகத்தில் குளவிக் கொட்டு சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அதுவும் பெருந்தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத்தொழிலாளர்கள் இதனால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். வேலைத்தள பாதுகாப்பின்றி தோட்டத் தொழிலாளர்களின் உயிருக்கே இது பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை, வட்டகொடை போன்ற தோட்டங்களில் அண்மைக் காலமாக குளவிக் கொட்டு சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஒவ்வொரு வருடமும் மலையக தோட்டங்களிலுள்ள நூற்றுக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டினால் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். அதுமட்டுமின்றி ஒவ்வொரு வருடமும் தோட்டங்களில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், பல்வேறு நோய்களுக்கு நாளாந்த மருந்துகளை உட்கொள்பவர்கள், ஓய்வூதிய வயதை நெருங்கும் தோட்டத் தொழிலாளர்கள் போன்றோரும் குளவித் தாக்குதலினால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

தலவாக்கலை, டயகம, அகரபதன, லிந்துலை, திம்புள்ள, பத்தனை, ஹற்றன், வட்டவளை, மஸ்கெலியா, நோர்வூட், பொகவந்தலாவ, பூண்டுலோயா, நானுஓயா போன்ற பொலிஸ் அதிகார எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் குளவிக் கொட்டு சம்பவங்களால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாக தோட்டத் தொழிற்சங்க பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.



தோட்டத்தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி எத்தனை உயிர்களை இழந்தாலும் அரசாங்கமோ, பொறுப்பான திணைக்களங்களோ இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை எனவும், குறைந்த பட்சம் தம்மை கடித்தால் கூட எவரும் கண்டுகொள்வதில்லை எனவும் தொழிற்சங்க பிரதிநிதிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

# ஜனாதிபதி அநுரவின் வெற்றியை நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளனர்

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என். ரவிக்குமார் வாழ்த்து

ஜனாதிபதி தேர்தலில் அநுரவின் வெற்றியை இந்நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ள தருணமிது. அந்த மகிழ்ச்சியில் புதிய ஜனநாயக மக்கள் முன்னணியும் இணைந்து கொள்வதாக அக்கட்சியின் தலைவர் என். ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

தமது கட்சியான புதிய ஜனநாயக மக்கள் முன்னணி பொது வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தாலும் கூட மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

எனவே முழு நாட்டு மக்களினதும் விருப்புடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் இணைந்து செயற்பட நாங்கள் தயாராகவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் இதுவரை காலமும் இடம்பெற்ற ஊழல் துஷ்பிரயோகம் நேர்மையற்ற அரசியல்வாதிகளின் நடத்தை காரணமாகவே இந்த தடவை மக்கள் தெளிவாக வாக்களித்துள்ளனர். அநுரவின் விடாமுயற்சி காரணமாகவே இந்த வெற்றியை பெற்றுள்ளார்.



இனி எதிர்வரும் காலங்களில் ஊழலற்ற ஒரு நாட்டை அவர் கட்டியெழுப்புவார் என்ற நம்பிக்கை எனக்கு வந்துள்ளது.

சிறுபான்மை மக்களுக்காக அவர் செயற்படுவார் என்றும் எதிர்பார்க்கின்றோம். அதேபோல் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு முதலிடம் கொடுப்பார் என்ற நம்பிக்கையும் எமக்கு உள்ளது.

வடகிழக்கு மக்களின் அரசியல் தீர்வுக்கும் நிரந்தர தீர்வை வழங்குவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. சிறுபான்மை மக்கள் தொடர்பில் அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கின்றோம்.

இதனைத் தொடர்ந்து வரப்போகும் பொதுத் தேர்தலில் அவருக்கு எமது மக்கள் ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். மாற்றம் என்பது நாட்டுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் தேவைப்படுகிறது. கடந்த காலங்களில் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பாக செயற்படாமல் போனார்கள். கடந்த கால கசப்புகளை மறந்து புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

# ரயில் தடம்புரள்வு: பயணிகள் அசௌகரியம்

**பதுளை நிருபர்**



பதுளையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பயணிகள் மற்றும் சரக்கு ரயில் நேற்று மதியம் தடம் புரண்டமையால் மலையக ரயில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

பதுளையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பயணிகள் மற்றும் சரக்கு ரயிலே இவ்வாறு தடம் புரண்டதாக பதுளை ரயில்வே கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

எல்ல மற்றும் தெமோதர ரயில் நிலையங்களுக்கு இடையிலான பகுதியிலேயே ரயில் தடம் புரண்டுள்ளது.

ரயில் தடம் புரண்டதன் காரணமாக ரயில் தண்டவாளம் பாரியளவில் சேதமடைந்துள்ளதாகவும், தற்போது சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

பதுளையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பயணிகள் மற்றும் சரக்கு ரயிலே இவ்வாறு தடம் புரண்டமையால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

எல்ல மற்றும் தெமோதர ரயில் நிலையங்களுக்கு இடையிலான பகுதியிலேயே மேற்படி ரயில் தடம் புரண்டுள்ளது.

# இளம் எழுத்தாளர் அம்னா இர்ஷாத்துக்கு விருது





கம்பளையைச் சேர்ந்த இளம் எழுத்தாளர், ஊடகவியலாளர் அம்னா இர்ஷாத் 'மக்களின் முரசு', 'லங்க புத்ர', 'தேச பந்து' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

'வாழும் போதே வாழ்த்துவோம்' என்னும் தொனிப் பொருளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்விலேயே அவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, தேசிய கலை அரன் மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இவ்விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகமாக செயற்பட்ட சமன் ரத்ன பிரிய மற்றும் இன்திக விஜய் ரத்ன, மாநகர முதல்வர் சுஜீவ மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் வெளிநாட்டு விவகார பணிப்பாளர் சுனில் பெரேரா என பலரும் கலந்து கொண்டனர்.

# இரவில் நாய்களை வேட்டையாடும் சிறுத்தைகள்; சமனலவத்த பகுதியில் மக்கள் அச்சம்



**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை சமனலவத்த பகுதியிலுள்ள வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் இரவு நேரங்களில் காணாமல் போவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு காலங்களில் இப்பகுதிக்கு வருகை தரும் சிறுத்தைகள் வீடுகளிலுள்ள நாய்களை வேட்டையாடிச் செல்வதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

இரவு நேரங்களில் சிறுத்தைகள் வந்து நாய்களை பிடித்து செல்வதை பொதுமக்கள் பலரும் கண்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

# வீதியில் கண்டெடுத்த பொருளை உரியவரிடம் ஒப்படைத்த பாடசாலை மாணவி

## மஸ்கெலியா மாணவி அபிநயாவின் மனிதநேயம்

**மஸ்கெலியா தினகரன் நிருபர்**

மஸ்கெலியா சென்.ஜோசப் தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவி பாலகிருஷ்ணன் அபிநயா என்பவர் வீதியில் கிடந்த அரைப் பவுண் தங்க தாலி, மற்றும் ரூ.3000 பணத்தை உரியவரிடம் ஒப்படைத்துள்ளார்.

மஸ்கெலியா சாமிமலை வீதியிலுள்ள அம்மன் ஆலய பிரதான வீதியில், நேற்று (24) காலை கண்டெடுத்த அரைப் பவுண் தங்க தாலி மற்றும் ரூ.3000 பணம் ஆகியவற்றை பொலிஸாரிடம் ஒப்படைத்துவிட்டு, இது தொடர்பில் பாடசாலை அதிபர் என்.பரமேஸ்வரனிடம் அறிவித்துள்ளார்.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ஏ. எஸ். புஷ்பகுமாரவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.



அதன்படி மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்ட ராணி பிரிவிலுள்ள ரெங்கன் புவனலோஜினி (வயது 46) என்பவரே அந்த பொருட்களின் உரிமையாளர் என அடையாளம் காணப்பட்டார்.

அந்த பொருட்கள், மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார முன்னிலையில் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மஸ்கெலியா ராணி பிரிவிலிருந்து கொழும்புக்கு முச்சக்கர வண்டியில் நேற்று காலை 6 மணிக்கு பணிக்கு சென்றுக் கொண்டிருந்த போது இந்தபொருட்கள் அடங்கிய பொதி தவறவிடப்பட்டுள்ளது. அவற்றை கண்டெடுத்து ஒப்படைத்த மாணவியை மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் அதிகாரிகள், பாடசாலை அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்கள் பாராட்டியுள்ளனர். பொருட்களுக்கான உரிமையாளரும் மாணவிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

# டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**



இரத்தினபுரி மாவட்டத்தில் அயகம பிரதேச செயலகப் பிரிவில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகுவதை தடுப்பதற்கான புதிய வேலைத் திட்டமொன்றையும் அமுல்படுத்தவுள்ளதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அயகம பிரதேச செயலகம், பிரதேசசபை, பொலிஸ், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் தொண்டர் அமைப்புகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விசேட டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்தும் வேலைத் திட்டம் அயகம பிரதேச செயலக பிரிவிலுள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி அண்மையில் நடைபெற்றது. அயகம பிரதேச செயலாளர் அருண சஞ்சய ஜயரத்ன, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பொலிஸ் பரிசோதகருமான வசந்த துசார ஜயசேகர், சுகாதார வைத்திய அதிகாரி கே.செனரத் உட்பட கிராம சேவை அதிகாரிகள், சமுர்த்தி ஊக்குவிப்பு அதிகாரிகள், விவசாய அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோரும் இவ் வேலைத்திட்டத்தில் இணைந்து கொண்டனர்.






# ஜனாதிபதி அப்துல்கலாம் ஞாபகார்த்த சர்வதேச அறக்கட்டளை வாழ்த்து

**அக்குறணை குறூப் நிருபர்**

புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அப்துல்கலாம் ஞாபகார்த்த சர்வதேச அறக்கட்டளையின் தலைவர் என். கருணாகரன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அப்துல்கலாம் ஞாபகார்த்த சர்வதேச அறக்கட்டளை சார்பாக அதன் தலைவர் ஏ.என். கருணாகரன் மற்றும் அதன் சட்ட ஆலோசகர், சட்டத்தரணி பீ.டி.விஜேரத்ன ஆகியோர் கையொப்பமிட்டு மேற்படி வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்துள்ளனர். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாரிய நன்மைகள் ஏற்பட இவ்வெற்றி பங்களிப்புச் செய்யவேண்டுமென அவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.





# இறக்குவானையில் இளைஞன் மீது தாக்குதல்; இ.தொ.கா முக்கியஸ்தர் கண்டனம்

இறக்குவானையில் இளைஞனொருவன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இறக்குவாணை டெல்வின் ஏ தோட்டத்தில் தமிழ் இளைஞனொருவனை (விஜயகுமார்) வீடு புகுந்து தாக்கி, அவரது வீட்டுக்கு சேதம் ஏற்படுத்திய சம்பவம் கண்டிக்கத்தக்கது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக, தோட்ட மக்கள் தனக்கு தெரிவித்ததையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய கும்பலை கைது செய்யுமாறு இறக்குவானை பொலிஸ் பொறுப்பதிகாரி, இரத்தினபுரி மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பவித்ர தயாரத்ன ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் உடனடியாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். இச்சம்பவம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் தாக்குதலுக்குள்ளான இளைஞன் இறக்குவானை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விடயத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்து சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் காவல் துறையினருக்கு அழுத்தங்களை கொடுப்பதாகவும் ரூபன் பெருமாள் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப வளாகம் திறப்பு



கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப வளாகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது."The Gate Institute" நிறுவனத்தின் அனுசரணையில் அமைக்கப்பட்ட இந்த தொழில்நுட்ப வளாகம் கடந்த வெள்ளிக்கிழமை (20) மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி.உடவத்த பிரதம விருந்தினராகவும், உபவேந்தர் மற்றும் பணிப்பாளர்களுக்கான குழுவின் தலைவரும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் சஞ்ஜீவனி கினிகத்தர மற்றும் இலங்கை வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், கலந்து சிறப்பித்தனர்.

தொழில் நிறுவனங்களின் அபிவிருத்தியில் தொழிநுட்ப அடிப்படையிலான கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதே, இந்த தொழில்நுட்ப வளாகத்தின் முக்கிய நோக்கமாகும்.

தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் வருமானத்தை நிலைபேறானதாக மேம்படுத்தும் நோக்கிலும் இது, செயற்படும்.

கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சிகளை வழங்கல், பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்துவதற்கும் கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்ப வளாகம் செயற்படவுள்ளது.

வெற்றிகரமான வணிக முயற்சிகளை தோற்றுவித்தல் ஊடாக பிராந்தியத்தில் வேலை வாய்ப்புக்களையும் செல்வத்தையும் அதிகரிக்கச் செய்யவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் மனப்பாங்கை விருத்தி செய்து, நாடு முழுவதும் தொழில் முயற்சிகளை உருவாக்கவும் இந்நிறுவனம் சேவைகளை வழங்கவுள்ளது.

அலுவலக வசதியை பகிர்ந்து கொள்ளல் அல்லது குறைந்த செலவில் வாடகைக்கு வழங்கல், தொழில் முயற்சி செலவினங்களைக் குறைக்கும் பொருட்டு இயந்திரங்கள் மற்றும் ஆய்வுகூட வசதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல், வணிக வாண்மைத்துவ ஒத்துழைப்பு அல்லது ஆலோசனை வழங்கல், உள்ளக மற்றும் வெளித்தொடர்பாடல் வசதிகளை வழங்கல் ஆகிய நான்கு கூறுகளில் இந்த தொழிநுட்ப வளாகம் கவனம் செலுத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளது.

## சூரியசக்தி மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

**மணல்சேனை நிருபர்**



பட்டிருப்பு கல்விவலயத்திற்குட்பட்ட குருமண்வெளி சிவ சக்தி மகாவித்தியாலயத்தில்,சூரிய சக்தி மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது.இப்பாடசாலையில், இரண்டாயிரமாம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் கல்வி கற்ற மாணவர்களின் ஏற்பாட்டில்,இந்த சூரிய சக்தி மின்பிறப்பாக்கி அன்பளிப்புச் செய்யப்பட்டது.அதிபர் சோ.செல்வமின் வேண்டுகோளுக்கிணங்க இது வழங்கப்பட்டது.

பாடசாலை சமூகம் மற்றும் நிர்வாகம் சார்பாக இம்மாணவர்களுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதியைப் புனரமைக்க கோரிக்கை

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அமரசிங்கம் வீதியில், ஏற்பட்டுள்ள பாரிய குழியால் பயணிகள் பெரும் அவதிகளை எதிர்கொள்கின்றனர். இவ் வீதியில் உள்ள மின்கம்பங்கள் இரவு வேளையில் ஒளிராதுள்ளமை இன்னும் பல சிரமங்களை ஏற்படுத்துவதாகாவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.திடீரென இக்குழிக்குள் வாகனங்கள் விழுவதால்,விபத்துக்களும் ஏற்படுகின்றன.

பல தடவைகள் இதுபற்றி அறிவித்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.அவசரமாக இவ்வீதியைப் புனரமைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# கொக்கட்டிச்சோலையில் சம்பிரதாய ஏர்பூட்டு விழா

**காரைதீவு குறூப் நிருபர்**



கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் ஆலய ஏர்பூட்டு விழா நேற்று (24) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.குழுத் தலைவர் க.சிவகுருநாதன் தலைமையில் சம்பிரதாய முறைப்படி இவ்விழா கோலாகலமாக நடைபெற்றது.

ஆலய பிரதம குரு, சிவஸ்ரீ மு கு. சச்சிதானந்த குருக்கள், ஆலய குரு சிவஸ்ரீ வ.ஜோதிலிங்க குருக்கள் ஆசியோடு இந்நிகழ்வு ஆலயத்தில் ஆரம்பமானது.

நிகழ்வில் அதிதிகளாக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், பட்டிப்பளை பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் கலாபூஷணம் ஞானபேரின்பம் ஆகியோர் கலந்து கொண்டார்கள் .

நிகழ்வில், பட்டிப்பளை பிரதேச முன்னாள் தவிசாளர் அதிபர் சிவ.அகிலேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்கள் மற்றும் விவசாயப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# கசிப்பு வைத்திருந்த 31 பேர் கைது விசேட சுற்றிவளைப்பில் சம்பவம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மூன்று இலட்சம் மில்லி லீட்டர் கசிப்பு போதை பொருட்களுடன் 31 பேர்,கைதாகியுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இவர்களைக் கைது செய்ததாக, காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலே இப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர், மற்றும் போதை தடுப்பு பொலிஸார் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்புக்களில்,இவர்கள் கைதாகினர்.மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமானவின் பணிப்புரையின் கீழ் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி. கஜநாயக்காவின் வழிகாட்டலில்,இச் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகக்குடா, கல்லடி, கிராம்குளம், தாழங்குடா, ஆரையம்பதி உட்பட பல இடங்களில் இந்த கசிப்புக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களுடன் சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## புதிய ஜனாதிபதிக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கம் வாழ்த்து

**நிந்தவூர் குறூப் நிருபர்**

ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் 09 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியான அதிமேதகு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

அந்த வாழ்த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சவாலான இக்கால கட்டத்தில் அரச ஊழியர்களும், பொதுமக்களும் தங்களுக்கு ஆணை வழங்கியுள்ளனர். சகல மக்களதும் பாரிய எதிர்பார்ப்பும் இதுவாகும்.

நாட்டின் சவால்களை வெற்றிகொண்டு சிறந்த இலக்கினை அடைவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. இந்த எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கைகளை வெற்றிகொள்ள உங்களின் பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டும். இதற்கு எல்லோருக்கும் பொதுவான இறைவனின் ஆசியும், அருளும் கிடைக்க வேண்டும்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.எம்.றிம்ஸான் இந்த வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதிக்கு விசேட துஆ பிரார்த்தனை



நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஆட்சியில் , நாட்டில் இன ஐக்கியம், சுபீட்சம் ஏற்பட்டு, வளமான நாடு உருவாகும் பொருட்டு விசேட துஆப்பிரார்த்தனை நடத்தப்பட்டது.

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் கடந்த (23) இந்த துஆ பிரார்த்தனை இடம்பெற்றது.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபையின் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் துஆப் பிரார்த்தனை நடத்தப்பட்டது. ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் கல்முனை தேர்தல் தொகுதி இணைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா உட்பட சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் அடிமட்டப் போராளிகள், இளைஞர்கள், பொதுமக்கள், ஜமாஅத்தார்கள் எனப் பலரும் இதில் கலந்து கெண்டனர்.

## நிந்தவூர் வைத்தியசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

**பாலமுனை விசேட நிருபர்**

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு மயக்க மருந்து இயந்திரம் (Anesthesia Machine) மற்றும் மகப்பேற்று விடுதிக்குரிய Cardiotocography (CTG) இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

PSDG வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் ஒன்பது மில்லியன் ரூபா நிதியில் இவை கொள்வனவு செய்யப்பட்டன. இந்த உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகரும், மகப்பேற்று வைத்திய நிபுணருமான டொக்டர் எம்.எஸ்.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் புகைப்படப் பயிற்சி

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசியப் பாடசாலையின் உயர்தரப் பிரிவில் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தைப் பயின்று வரும் மாணவர்கள் மத்தியில் புகைப்படக் கலையை விருத்தி செய்யும் நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட செயன்முறைப் பயிற்சி கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். உதவி பிரதேச செயலாளர் வை.ராசித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.முகம்மட் ரின்சான், மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.நவப்பிரியா, பாடசாலையின் உயர்தரப் பிரவு வலயத் தலைவர் எம்.ஐ.எல். பைஷல், அபிவிருத்தி உத்தியோகத்தர் பர்ஷானா சம்சுதீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கல்லூரியில் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தைப் பயின்று வரும் சுமார் நூறு மாணவர்கள் புகைப்படக்கலை தொடர்பிலான பயிற்சியைப் பெற்றுக் கொண்டனர்.

புகைப்படக் கலை தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்ட வளவாளரான ஐ. ஹாதி ஹசன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு புகைப்படக் கலை தொடர்பான விளக்கங்களையும் செயன்முறைப் பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்கினர்.

**எம். ஏ. றமீஸ்,**

## குடிநீர் கட்டணத்தை மேலும் குறைக்க கோரிக்கை: தாமதக் கட்டணங்களால் சிரமம் எனவும் கவலை

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

குடிநீர்க் கட்டணத்தை மேலும் குறைத்து உதவுமாறு அம்பாறை மாவட்ட நீர்ப்பாவனையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் ஏழை மக்களுக்கு உதவ முன்வர வேண்டும் எனவும் கோரப்படுகின்றது.இவ்விடயம் தொடர்பில் மேலும் குறிப்பிடப்படுவதாவது: கடந்த ஆட்சியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் சுமார் 50 வீதம் வரை அதிகரிக்கப்பட்ட நீர்க்கட்டணம், அண்மையில் குறைக்கப்பட்டது. எனினும், வீட்டுப் பாவனைக்கான 07 வீத கட்டணக் குறைப்பானது போதுமானதாக இல்லை. நீர்ப்பாவனையாளர்கள் அடிக்கடி இதனைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஏற்கனவே, அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம் இரு முறை குறைக்கப்பட்டுள்ள போதிலும், அண்மைய நீர்க்கட்டணக் குறைப்பானது போதுமானதாக இல்லை என்பதே அதிகமான நீர்ப்பாவனையாளர்கனகளின் ஆதங்கமாக உள்ளது.அதிகரிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதில்,வாடிக்கையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர். இது தவிர, குறித்த காலத்தினுள் கட்டணம் செலுத்தத் தவறும் வாடிக்கையாளர்களிடம் தாமதக் கட்டணமும் அறவிடப்படுகிறது. இவற்றைக் கருதியே, பாவனையாளர்கள் நன்மையடையத்தக்க வகையில், நீர்க்கட்டணத்தை மேலும் குறைப்புச் செய்து உதவுமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.



இலங்கை 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டதையடுத்து, நேற்று முன்தினம் (23) கிண்ணியா புஹாரியடி சந்தியில் அரவது கட்சி ஆதரவாளர்கள் திசைகாட்டி வடிவிலான கேக் வெட்டி கொண்டாடியபோது...

# வடக்கின் உதயம்

சுமந்திரனும் சாணக்கியனும்

## வடக்கு, கிழக்கு தமிழர்களின் செல்வாக்கை இழந்துவிட்டனர்

### சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



சுமந்திரனும் சாணக்கியனும் வட, கிழக்கு தமிழ் மக்களின் செல்வாக்கை இழந்துவிட்டதாக, பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ள அவர், தங்களது கோரிக்கைகளின் நிமித்தமே வடக்கு, கிழக்கு மக்கள் சஜித்துக்கு வாக்களித்தார்கள் என சுமந்திரனும் சாணக்கியனும் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதற்கு முந்தைய தேர்தலிலும் சஜித் பிரேமதாஸ, தமிழ் மக்களின் கணிசமான வாக்குகளைப் பெற்றவர். பல வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதனால் அவர் பலருடன் தொடர்பு வைத்திருக்கின்றார்.

அதைவிட யாழ்ப்பாணக் குடாநாட்டில் பலதேர்தல் தொகுதிகளில் முதனிலை பெற்றவர் அரியநேத்திரன். அவர் சிலதொகுதிகளில் இரண்டாவது நிலைபெற்றபோதும் மிகக் குறைவான வாக்குகளினாலேயே இரண்டாவது இடத்துக்கு வந்தார். எனவே பெருவாரியான மக்கள் மனமுவந்து அரியநேத்திரனுக்கு வாக்களித்துள்ளார்கள். அத்துடன் முஸ்லிம்கள் பலர் சஜித்துக்கு வாக்களித்திருந்தார்கள். அவர்கள் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரின் வேண்டுகோளை மதித்து அவ்வாறு வாக்களிக்கவில்லை.

முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களில் ரிஷாத் பதியுதீனின் செல்வாக்கு இருந்து வருகிறது. மஸ்தானின் செல்வாக்கும் இருந்து வருகின்றது. எனவே சஜித்துக்கு முஸ்லிம்கள் பெருவாரியாக வாக்களித்திருக்கலாம். மேலும், முல்லைத்தீவில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று அவர்களும் (சிங்களவர்கள்) அங்கு வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளார்கள். முல்லைத்தீவில் மக்கள் மற்றும் படையினரின் விகிதவீதம் 2:1 ஆகும். எனவே, சஜித்துக்கு கிடைத்த வாக்குகள் ஏற்கனவே அவருக்கு இருந்த வாக்குகளும்.

நூற்றுக்கும் அதிகமான பௌத்த விஹாரைகளை முல்லைத்தீவிலும் கிழக்கு மாகாணத்திலும் கட்டவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் சஜித். அவ்வாறான ஒருவருக்கு சுமந்திரன் கூறியதால் தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா?

கிழக்கு மாகாண தமிழ் மகனான அரியநேத்திரனுக்கு பெருவாரியாக வாக்களித்த வட மாகாணத் தமிழ் மக்கள் பாராட்டுக்குரியவர்கள்.

வெறுமனே 1.69% வாக்குகளையே பெற்ற அரியநேத்திரன்

## இனி விபரீத விளையாட்டுக்கள் வேண்டாம் தமிழ் பொதுக்கட்டமைப்பிடம் கோரிக்கை

### எம்.ஏ.சுமந்திரன்

**யாழ் . விசேட நிருபர்**



நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் வெறும் 1.69% வாக்குகளையே பெற்றதன் மூலம் அரியநேத்திரன் தமிழ் மக்களால் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை என்பது நிரூபணமாகியிருப்பதாக, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் மக்களின் மதி நுட்பத்தால் பெரும் அபாயத்திலிருந்து நாம் தப்பித்துக் கொண்டுள்ளோம். இனிமேலும் இவ்விதமான விபரீத விளையாட்டுக்களில் ஈடுபட வேண்டாம் என தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோரிடம் வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2024 ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற எண்ணக்கரு உதயமான பொழுதிலிருந்தே அதனை மிகக் கடுமையாக நான் எதிர்த்தது அனைவரும் அறிந்ததே. அவ்வெதிர்ப்புக்கான காரணங்கள் பல தருணங்களிலே வெளிப்படுத்தியிருந்தேன்.

இலங்கை தமிழரசுக்கட்சி எத்தருணத்திலும் தமிழ்ப் போதுவேட்பாளரை நிறுத்துகிற முயற்சியில் பங்கெடுக்கவில்லை. மாறாக பிரதான வேட்பாளர்கள் மூவரோடும் கட்சியின் முடிவின்படி உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

எமது கோரிக்கைக்கமைவாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் வாக்களித்ததன் காரணமாக ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் சஜித் பிரேமதாச வெற்றி பெற்றிருக்கின்றார். வடக்கு கிழக்கிலே அண்ணளவாக 80 % சதவீதமானவர் நாம் அடையாளம் கண்ட மூன்று பிரதான வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இது எமது கட்சி எடுத்த நிலைப்பாட்டுக்கான மாபெரும் அங்கீகாரம்.

மாறாக அரியநேத்திரனுக்கு வடக்கு, கிழக்கில் 14 % க்கும் குறைவாகவே வாக்குகள் கிடைத்துள்ளன. மிகக் குறைவான அளவு வாக்குகளைப் பெற்றதன் மூலமும், பிரதான தமிழ்க் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதரவு மறுக்கப்பட்ட நிலையிலும், அரியநேத்திரனின் படுதோல்வி தமிழ் மக்களின் தோல்வியாக சித்தரிக்கப்படுவதிலிருந்து தப்பியிருக்கின்றது என தெரிவித்துள்ளார்.

மது போதையில்

## மருமகனை தாக்கிய மாமனார் கைது



மாமன், மருமகனுக்கு இடையில் மது போதையில் ஏற்பட்ட தகராறில், இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட மருமகன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

32 வயதுடைய கல்மடோ இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த பூபாலசிங்கம் ஐங்கரன் என்ற இளைஞனே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில், கிளேசி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மாமனார் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக தடவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

தேவையற்ற வதந்திகளை பகிராது

## பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு வடக்கு முன்னாள் ஆளுநர் கோரிக்கை



தேவையற்ற வதந்திகளை பகிராது இந் நாட்டின் அனைத்து பிரஜைகளும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டுமென, வட மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக செயற்பட்டு வந்த பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று (24) அவரது பதிவியை இராஜினாமா செய்திருந்தார்.

இந்நிலையில், பி.எஸ்.எம். சார்ள்ஸின் நிழற்படத்தை முன்னிலைப் படுத்தி, சமூக ஊடகங்களிலும், இணையதளங்களிலும் பல்வேறு வதந்திகள் பகிரப்படுகின்றன.

அந்த செய்தியில், முன்னாள் ஆளுநர் ஒருவர் வெளிநாட்டுக்கு செல்ல முயற்சித்து, விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், சமூக ஊடகங்களிலும், இணைய தளங்களிலும் தகவல்களை பகிரும்போது, செய்திக்கு பொருத்தமான நிழற்படங்களை பகிரவும், தேவையற்ற வதந்திகளை பகிராது இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## யாழில். பெண்களுடன் அநாகரிகம் எச்சரித்த பஸ் சாரதி மீது வாள்வெட்டு

**யாழ் . விசேட நிருபர்**



யாழ் . மத்திய பஸ் நிலையத்துக்கருகில் பெண்களுடன் சேட்டை புரிந்த இளைஞர்களை எச்சரித்த தனியார் பஸ் சாரதி மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வினாசித்தம்பி ஜெகதீஸ்வரன் என்ற பஸ் சாரதி மீதே நேற்று முன்தினம் (23) இவ்வாறு வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கருகில் 04 பேர் கொண்ட கும்பலொன்று, பஸ் நிலையத்துக்கு வரும் பெண்களுடன் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டுள்ளமைய அவதானித்த, இந்த பஸ்ஸின் சாரதி, குறித்த இளைஞர்களை கடுமையாக எச்சரித்து, அங்கிருந்து அப்புறப் படுத்தியிருந்தார்.

இந்நிலையில், இந்த கும்பலை சேர்ந்தவர்கள் இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்று, பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்ஸை வழிமறித்து வாள் வெட்டு தாக்குதலை நடத்திவிட்டு தப்பி சென்றுள்ளனர். கொழும்புத்துறை பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் பயணித்துக்கொண்டிருந்த பஸ், மணியந்தோட்டம் பகுதியில் வைத்து இவ்வாறு வழிமறிக்கப்பட்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த சாரதி யாழ் . போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



கொழும்பைச் சேர்ந்த விஸ்வரட்ணம் தயாளன் அண்மையில் கொழும்பு மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதவான் சந்திமா எதிர்சிங்க முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

விஸ்வரட்ணம், சவுந்திரநாயகி தம்பதிகளின் புதல்வரான இவர், தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் சென். பொஸ்கோ கல்லூரியிலும், உயர்கல்வியை பருத்தித்துறை ஹார்ட்லிக் கல்லூரியிலும் தகவல் தொழில்நுட்பக் கல்வியை சிங்கப்பூர் டெமாஸ் கல்லூரியிலும் கற்றுள்ளார். தொழிலதிபரான இவர் சமூகசேவையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக சுற்றுலா தினம்

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் "சுற்றுலாவும் அமைதியும்" நிகழ்வு

**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டு நிகழ்வுகளின் வரிசையாக, உலக சுற்றுலா தினத்தினை முன்னிட்டு, "சுற்றுலாவும் அமைதியும்" என்ற தொனிப் பொருளில் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்தியாவின், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைந்து முதல் நாள் ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

செப்டெம்பர் 27ஆம் திகதி ஆரம்பமாகும் நிகழ்வுகள், 29ஆம் திகதி வரையிலான மூன்று நாட்களும் காலை 10 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை இடம்பெறும். இதன்போது, உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை, கலாசாரத் திருவிழா, மாணவர்களின் உணவுச் சந்தை போன்றன யாழ். பல்கலைக்கழக வாளாகத்தில் இடம்பெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வு "சுற்றுலாவும் அமைதியும்" என்ற தொனிப் பொருளில் ஆய்வரங்காக நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியர் பிறேம குமார டி சில்வா, ஆராத சுருதி உரையினை நிகழ்த்தவுள்ளார்.

மற்றுமொரு ஆராதசுருதி உரையினை *Jetwing Symphony* குழுமத்தின் தலைவர் கிரான் குரே நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து நடைபெறும் கலந்துரையாடலில் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் தலைவரும் பேராசிரியருமான சு.ஊ அனு சந்திரன், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சுற்றுலாத்துறைக் கலாநிதி வெங்கட் ராவோ, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் கற்கைகளின் தலைவர் கலாநிதி பத்மநேசன், *Airport and Aviation Service Sri Lanka* தனியார் நிறுவனத்தினுடைய சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் துறைத் தலைவர் சிமித் டி சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஜனாதிபதி அநுரவுக்கு வாக்களித்த பேருவளை பகுதி மக்களுக்கு நன்றி

சீனன்கோட்டை நிகழ்வில் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்பு

**பேருவளை விசேட நிருபர்)**



புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுரகுமார திசாநாயக்கவின் பதவியேற்பு நிகழ்வை அடுத்து, வாக்களித்த பேருவளை மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விஷேட கூட்டமொன்று பேருவளை சீனன்கோட்டை பகுதியில் (23) இரவு நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் சீனன் கோட்டை பகுதி முக்கியஸ்தர் மபாஸீன் அஸாஹிரின் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பேருவளை நகரசபை முன்னாள் உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட முக்கியஸ்தருமான அரூஸ் அஸாத், ரம்ஸான் சிஹாப்தீன், ஜீவன் சம்பத் மற்றும் கெனத் ஆசிரியர் உட்பட பலரும் இங்கு உரையாற்றினர்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாக்களித்த பேருவளை வாழ் மக்களுக்கு இதன்போது நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

பேருவளை தொகுதியில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் எல்லா வேற்றுமைகளையும் மறந்து தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்காக எம்மோடு கைகோர்த்து செயல்பட்டனர். சிறந்த ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்காகவும், உயர்ந்த அரசியல் கலாசாரமொன்றை தோற்றுவிப்பதற்காக வேண்டி நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தியோடு கைகோர்த்தனர்.

இந்த தேர்தலில் ஒத்துழைத்ததை விட எதிர்வரும் பொதுத் தேர்தலில் பல மடங்கு ஒத்துழைப்பை நாம் மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து தாய் நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் அணி திரள்வோம் என்றார்.

## கலை – இலக்கிய துறைசார் ஆர்வலர்களுக்கு வாய்ப்பு

கலை, இலக்கிய துறைகளில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளை ஊக்குவிப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு தலைநகரில் கடந்த 44 ஆண்டுகளாக கலை, இலக்கிய பணியாற்றிவரும் புதிய அலை கலை வட்டம் தற்போது கலை, இலக்கிய துறைகளில் முழுமையான ஆர்வம் கொண்டு செயற்பட விரும்பும் இளையவர்களை அமைப்பில் இணைத்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

அமைப்பில் இணைந்து செயற்பட விரும்புவோர் தமது விண்ணப்பத்தை இலக்கம் 53, சங்கமித்த மாவத்தை, கொழும்பு 13 என்ற முகவரிக்கோ அல்லது 075 4880172 என்ற வட்சப் இலக்கத்திற்கோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வெகுவிரைவில் அரங்கம் காணும் நிகழ்வுகளில் அவரவர் திறமைகளுக்கு ஏற்ப வாய்ப்புகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாத்தளை கொங்காவல ஜும்ஆ பள்ளிவாசலில் மவ்லீத் தமாம்

**மாத்தளை சுழற்சி நிருபர்)**

மாத்தளை கொங்காவல ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை மற்றும் மீலாத் கமிட்டி இணைந்து வருடாந்தம் நடத்தி வரும் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினமான ரபியுல் அவ்வல் மாதத்தை சிறப்பிக்கும் முகமாக 12 தினங்கள் சுபுஹான மவ்லீத் ஓதும் நிகழ்வு இடம்பெற்றது. மௌலீது மஜ்லிஸின் தமாம் வைபவமும் துவா பிரார்த்தனையும் (15) அஸர் தொழுகையைத் தொடர்ந்து இடம்பெற்றதோடு மாத்தளை அல்நஜா அரபுக் கல்லூரியின் உப அதிபர் மௌலவி கதாபியினால் விசேட பயான் நிகழ்ச்சியும் நிகழ்த்தப்பட்டது.



## ஜம்இய்யதுல் உலமா மாத்தறை கிளை ஜனாதிபதி அநுரவுக்கு வாழ்த்து

**(வெலிகம தினகரன் நிருபர்)**

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் மாத்தறை மாவட்ட கிளை வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

உங்களது பதவிக் காலத்தில் அனைத்து குடி மக்களுக்கும் அமைதி, செழிப்பு, ஒற்றுமை ஆகியன சிறப்பாக அமையும் என இலங்கை வாழ் முஸ்லிம்கள் நம்புவதுடன் அதற்காக பிரார்த்தனையும் செய்கின்றோம்.


எந்த ஒரு காரணமும் கூறாது கிடைக்கப்பெற்ற எந்த ஒரு அல்லது அனைத்து கூறுவிலைகளையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் ஏக உரிமை தி அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் வசமானதாகும்.

**பெறுகைத் தலைவர்**
**தி அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்**
**இல. 35, லேக் ஹவுஸ், டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு - 10.**

**விபரங்களுக்கு தொ.: 011-2429422, 2429451, 2429629**

LAKE HOUSE

# கேள்விகளுக்கான அழைப்பு

## களனிப் பல்கலைக்கழகம்
## மருத்துவ பீடம்

### களனி பல்கலைக்கழகம், மருத்துவ பீடத்தின் பிரதான பரீட்சை மண்டப வசதிகளை புதுப்பித்தலுக்கான வடிவமைப்பு, வழங்கல், நிர்மாணம் மற்றும் செயற்படுத்துதல்

**கேள்வி இல. UOK/FM/DO/02/WORKS/24/01/01**

1. ராகம, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடத்தின் தற்போதுள்ள பரீட்சை மண்டபத்தின் கேட்போர் கூடத்தை மேம்படுத்தும் உள்ளக வேலைகளின் வடிவமைப்பு, வழங்கல், நிர்மாணம் மற்றும் செயற்படுத்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து ராகம, களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழு தலைவரால் முத்திரைக்குறி பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்கான மதிப்பீட்டுக் கிரயம் 45 மில்லியன் (வெட் இன்றி) ரூபாவாகும் என்பதுடன் நிர்மாணக் காலம் 120 நாட்களாகும்.
2. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
3. கேள்விகளைப் பெற்றுக்கொள்ள தகுதி பெற்ற கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றவராக இருத்தலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ICTAD பதிவு - SP2 அல்லது C4 அதற்கு மேல்
4. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தை மருத்துவ பீடத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2024 செப்டெம்பர் 25ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 14ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ராகம - 11010, தலகொல்ல வீதி, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை வேலை பொறியியலாளர் அலுவலகம், வேலை பகுதி, களனிப் பல்கலைக்கழகம், தலுகம, களனியில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112914487) மற்றும் 2024 செப்டெம்பர் 25ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 14ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ராகம - 11010, தலகொல்ல வீதி, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. இந்த கேள்விகள் இரண்டு கடித உறை முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை தலைவர், பெறுகைக் குழு, மே/பா சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மருத்துவ பீடம், களனிப் பல்கலைக்கழகம், ராகம என முகவரியிட்டு 2024 ஒக்டோபர் 15ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் ராகம, தலகொல்ல வீதி, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024 ஒக்டோபர் 15ஆம் திகதி பி.ப. 2.30 மணியாகும் என்பதுடன் இதே நாளில் பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்த உடனடுத்து சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
8. சகல கேள்விகளுடனும் கேள்விப் பிணையின் நிலையான படிவத்தைப் பயன்படுத்தி இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் (இலங்கை மத்திய வங்கியில் பதிவைப் பெற்றுள்ள வர்த்தக வங்கி) வழங்கப்பட்ட 180 நாட்கள் வரையில் (2024-10-15ஆம் திகதி முதல் 2025-04-12ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 450,000.00) ரூபாவிற்கான கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது ராகம, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், காசாளருக்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியின் பயனாளி இலங்கை, களனிப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவிருத்தல் வேண்டும்.
9. ராகம, களனிப் பல்கலைக்கழகம், மருத்துவ பீடத்தில் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டத்தைத் தொடர்ந்து வேலைத் தள விஜயம் இடம்பெறும்.

**தலைவர்,**
**சிறு பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**
**2024-09-25.**

## கேள்வி அறிவித்தல்

# இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

### பாதுகாப்புச் சேவையை வழங்குதல்

**கேள்வி இலக்கம்: 118/2024.10.16**

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு 24 மணி நேரமும் பாதுகாப்புச் சேவையை வழங்க இயலுமான பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு / பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ள பாதுகாப்பு சேவை வழங்கும் பிரசித்தி பெற்ற மற்றும் அளவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இராணுவ பின்புலத்தைக் கொண்ட சேவை வழங்க இயலுமான பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களைச் சமர்ப்பிக எதிர்பார்க்கும் நிறுவனங்கள் 2024-10-15ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பெறுகை உதவிப் பணிப்பாளரிடமிருந்து கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு 2500.00 இல. ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை 2024-10-16ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு-07 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் 2024-10-16ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு பின் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர்,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07**

---

# For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

**+94 112429342**
**+94 112429343**

---

CDU/TS/2024/17&18

# இங்கை சுங்கம்

### கையகப்படுத்தப்பட்ட பொருட்களின் கேள்வி விற்பனை

இலங்கை சுங்கத்தின் மத்திய அகற்றல் பணியகத்தில் 2024 செப்டெம்பர் 26ம் திகதி நடைபெறவிருந்த கேள்வி விற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் 2024 செப்டெம்பர் 27ம் திகதி மு.ப. 10.30 இற்கு நடைபெறும்.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளலாம்.**

011-2430795
011-2143434 நீடிப்பு 7300

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்**
**இலங்கைச் சுங்கம்**
**சுங்க இல்லம்**
**இல. 40, பிரதான வீதி,**
**கொழும்பு - 11**

---

SRI LANKA CONVENTION BUREAU

# சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
# இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB)

## வெற்றிடங்கள்

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB), கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணம், MICE மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளை மேம்படுத்தும் நிறுவனமாகும். SLCB இனால் பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரப்படுன்கிறது.

**பொது முகாமையாளர் பதவி - HM 2-2**

**வெளி விண்ணப்பதாரர்கள் (1 அல்லது 2 கீழே)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகம்/நிதி/வணிக நிர்வாகம்/மேலாண்மை/சட்டம/சமூக அறிவியலில் இளங்கலை பட்டம்.

 மற்றும்

 முதுகலை வணிக நிர்வாகம் / பொது நிர்வாகம் / சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் மேலாண்மை / அறிவியலில் முதுகலைப் பட்டம்.

 மற்றும்

 முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 20 வருட அனுபவம் அதில் 05 வருட அனுபவம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் ஒரு கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன் இருத்தல் வேண்டும்.

 அல்லது

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகம் / நிதி / வணிக நிர்வாகம்/மேலாண்மை / சட்டம / சமூக அறிவியலில் இளங்கலை பட்டம்.

 மற்றும்

 அறிவியல் / வணிக நிர்வாகம் / நிதி / சுற்றுலா அல்லது சந்தைப்படுத்தல் துறையில் முனைவர் பட்டம் (PhD).

 மற்றும்

 முதல் பட்டம் பெற்ற பிறகு ஒரு நிறுவனம், வாரியம் அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட சாதனை மற்றும் நிர்வாக அனுபவத்துடன் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் குறைந்தது 05 வருட அனுபவம்.

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

சிரேஷ்ட முகாமையாளர் (HM) பிரிவில் பதவிக்கு தொடர்புடைய பாடப் பிரிவில் குறைந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

 மற்றும்

பல ஒழுங்கு குழுக்களை வழிநடத்துவதற்கும் நிரூபிக்கப்பட்ட திறன். மனித வளங்கள் மற்றும் பிற வளங்களை முறையான வரிசைப்படுத்தல் மற்றும் திறமையான மேலாண்மையில் அனுபவம்.

**வயதெல்லை :** விண்ணப்பதாரர்கள் 35 வயதிற்கு குறையாத 55 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

**சம்பள அளவு : (HM 2-2) 2016: ரு. 93,020 - 12 x 2,700 - 125,420/-**

**அடிப்படைச் சம்பளம் : ரு.** 93,020/- வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு+ ஏனைய மாதாந்த கொடுப்பனவுகள்

**ஏனையவை :**

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் கூடிய உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத் தினை கொண்டிருத்தல் வேண்டும்.
iii. நேர்மையான ஒழுக்காற்றுத் தன்மையை கொண்டவராக இருத்தல் வேண்டும்

**நன்மைகள் :**

i. பணியாளர் மற்றும் குடும்பத்தினரை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.
ii. கடன் வசதிகள்
iii. எரிப்பொருள் மற்றும் போக்குவரத்து கொடுப்பவுகள்
iv. தொலைபேசி கொடுப்பனவு
v. தொழில்முறை கொடுப்பனவு

**கடமைகளின் பட்டியல்**

- பணியகத்தின் குறிக்கோள்களின் சாதனைகளுக்காக தலைமை நிர்வாக அதிகாரியாக செயல்படுதல்.
- பணியகத்தின் தலைமை நிதி அதிகாரியாக பணிபுரிதல்.
- சுற்றுலா மாஸ்டர் திட்டத்தின்படி பணியகத்தின் குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்களை தயாரித்தல் மற்றும் அதற்கான ஒப்புதலைப் பெறுதல்.
- முகாமை சபையின் ஒப்புதலுடன் திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- பணியகத்தின் சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயல்பாடுகளின் மேற்பார்வை
- பணியகத்தின் நிர்வாக மற்றும் செயல்பாட்டு செயல்பாடுகளின் மேற்பார்வை
- செயல்திறனைக் கண்காணித்து மதிப்பீடு செய்து எதிர்காலச் செயல்களுக்கான பரிந்துரைகளைச் செய்யுங்கள்
- அனைத்து செயல்பாடுகளும் விதிகள் மற்றும் விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தவும்
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பதவி உயர்வுகளில் கலந்துகொள்வது மற்றும் தேவைப்படும்போது பணியகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்
- தேவைப்படும் போதெல்லாம் மற்ற சுற்றுலா முகவர்கள் மற்றும் சுற்றுலா சங்கங்களுடன் ஒருங்கிணைப்பதற்கான முடிவுகளை எடுத்தல்
- தேவைப்படும் போதெல்லாம் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், மாநாடுகளில் பணியகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் மற்றும் இலங்கையில் உள்ள மற்ற நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துதல்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களின் கல்வி / தொழில்முறை தகுதிகள், பணி அனுபவம் மற்றும் உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்கள் ஆகியவற்றைக் உருதிப்படுத்தும் சான்றிதழ்களின் நகல்களுடன் **2024 ஒக்டோபர் 9**ஆம் திகதிக்கு முன் பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தயவுசெய்து நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை உறையின் மேல் இடது பக்க மூலையில் குறிப்பிடவும்.

அரச திணைக்களங்கள் / அரச கூட்டுத்தாபங்கள் / சட்டப்பூர்வ அமைப்புகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத்தின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
**இலங்கை மாநாட்டுப் பணியகம்,**
நான்காம் மாடி, ஹோட்டல் பாடசாலை கட்டிடம், இல-78, காலி வீதி,
கொழும்பு 03.

SELACINE

---

## விலைமனு கோரல்

# தள வைத்தியசாலை கந்தளாய்

கந்தளாய் தள வைத்தியசாலையின் கீழ்தரப்பட்ட நிர்மானப்பனிகளுக்கான தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களின் (கொந்தராத்துக்காரர்களின்) முத்திரை பதிக்கப்பட்ட விலைமனுக்களை கோருவதற்கு வைத்தியசாலையின் பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் நிர்மான பணிகளுக்கான முழுமையான ஒப்பந்தப்பத்திரம் (விலைமனுக்கள்) 2 பிரதிகளுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | பணியின் பெயர் | கேள்விதாரர்களின் தகுதி | மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணம் | லங்சு பிணைக்காரரின் பெறுமதி | மதிப்பிடப்பட்ட மூலச்செலவு மில்லியனில் |
|---|---|---|---|---|---|
| 2024-06 | Renovation of Canteen | C-7 or above | 2000.00 | 60,000.00 | 5.6 |
| 2024-08 | Renovation of clinic Pharmacy | C-7 or above | 2000.00 | 52,000.00 | 5.0 |

1. இதற்காக காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விப்பத்திரம் முன் வைக்கப்படல் வேண்டும்.
2. ஒப்பந்த (விலைமனுக்கள்) பத்திரம் மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தி வார நாட்களில் 2024.09.25ம் திகதியிலிருந்து 2024.10.15 வரை மு.ப. 9.00 இல் இருந்து பி.ப. 2.00 வரை வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
3. 2024.10.16ம் திகதி பி.ப. 2.00 க்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதோடு அதற்கு முதல் பெறும் வகையில் விலைமனுக்கள் **“தலைவர், மீள்நிர்மான பணிக்குழு, தளவைத்தியசாலை கந்தளாய்”** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்ப முடியும். இல்லையெனில் கந்தளாய் தள வைத்தியசாலையின் காரியாலயத்திற்கு கொண்டு வந்து தரமுடியும். குறித்த நேரத்திற்கு பின் கிடைக்கும் (டென்டர்) ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்த பத்திரம் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.
4. கேள்விமனுக்களைக் கொண்ட கடித உறையின் மேல் இடது மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் குறித்த பணி தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
5. கேள்விமனுக்கள் திறப்பதற்கு முன்னதான கூட்டம் (Pre-bid meeting) 2024.10.09ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும்.

**எந்தவொரு கேள்விமனுவையும் ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக்குழுவிற்கு உண்டு.**

மேலதிக விபரம் : 026-2234948, 0752526072

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு**
**தள வைத்தியசாலை**
**கந்தளாய்**

---

## பெறுகை அறிவித்தல்

# பாலிந்தநுவர பிரதேச சபை

பாலிந்தநுவர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பதுரலிய பஸ் நிலையம் அருகில் கடைஅறை அமைப்பை நிர்மாணித்தல் இங்கு கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள நிர்மாணத்திற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.10.15 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். அன்றே (2024.10.15) மு.ப. 10.05 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

1. கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு குறித்த படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகையை செலுத்தி 2024.09.25 முதல் 2024.10.14 பி.ப. 3.00 வரை பாலிந்தநுவர பிரதேச சபை அலுவலகத்தில் வாரத்தின் வேலை நாட்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்வி விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், அவற்றை முறையாகப் பூர்த்தி செய்து மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியாக குறிப்பிட்டு வேறுவேறாக பொறியிட்டு, ஒரு உறையில் இட்டு “ செயலாளர் மற்றும் பாலிந்தநுவர பிரதேச சபையின் அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி, பாலிந்தநுவர பிரதேச சபை” என்ற முகவரிக்கு 2024.10.15 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். இல்லையெனில் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் போது குறித்த விண்ணப்பதாரியின் வெட்வரி பதிவு இருப்பின் அதனோடு சம்பந்தப்பட்ட இலக்கத்தை குறிப்பிடுதல் கட்டாயமாவதுடன் குறித்த சான்றிதழின் பிரதியொன்றையும் கேள்விப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. இச் செயற்றிட்டத்தின் நிர்மாண விடயங்கள் 60 நாட்களுக்குள் பூர்த்தி செய்து பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்கள் CIDA நிறுவனத்தின் C4 அல்லது C5 பதிவை செயற்பாட்டு நிலையில் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். குறித்த விண்ணப்பதாரி அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
6. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் போது விண்ணப்பதாரி தமது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணமொன்றின் மூலம் தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.
7. 2024.10.15 மு.ப. 10.05 இற்கு கேள்வி திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு மட்டும் சமுகமளிக்கலாம்.
8. மேலதிக விபரங்கள் மற்றும் பெறுகை நிபந்தனைகளை இவ் அலுவலகத்தில் விசாரித்து அறியலாம்.
9. பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**அட்டவணை**

| தொடர் இல. | செயற்றிட்டப் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | பாலிந்தநுவர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பதுரலிய பஸ் நிலையத்திற்கு அருகில் கடைஅறை அமைப்பை நிர்மாணித்தல் | ரூபா. 24,318,534.48 (வெட் இன்றி) | ரூபா. 7500.00 | ரூபா. 243,000.00 |

2024.09.24 பாலிந்தநுவர பிரதேச சபை அலுவலகத்தில் பிரதேச சபை அலுவலகத்தில்,

**பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**பாலிந்தநுவர பிரதேச சபையின் அதிகார செயற்பாடுகளை**
**அமுல்படுத்தும் அதிகாரி,**

**தொ.பே.இல. 034 - 2244476**
**மின்னஞ்சல் முகவரி : palindanuwara.p.sabha@gmail.com**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

# கமத்தொழில் அமைச்சு

## சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)

## பெறுகை அறிவித்தல்

### சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்ற ஆலோசகர் / அதிகாரியைத் தெரிவு செய்தல் (Selection of an Environment & Climate change Consultant/ Officer)

கமத்தொழில் அமைச்சின் கீழ் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) நடைமுறைப்படுத்தப்படுகிறது மற்றும் இதற்கு இலங்கை அரசாங்கத்தினாலும் சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியத்தினாலும் (IFAD) கூட்டாக நிதியளிக்கப்பட்டுள்ளது. சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டமானது (SAPP) இலங்கையின் சிறு அளவிலான உடைமையாளர்களின் வறுமைக் குறைப்பு மற்றும் போட்டித் தன்மைக்கு பங்களிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வணிக ரீதியிலான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்புகளில் ஈடுபட்டுள்ள 57,500 சிறு பங்குடைமை குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவின் தரத்தை நிலையாக உயர்த்துவதே திட்ட வளர்ச்சியின் நோக்கமாகும். பொது, தனியார், உற்பத்தியாளர் கூட்டாண்மைகள் (4Ps) மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் இலங்கை அரசாங்கம் (GOSL) முன்னுரிமைகளை அடைய சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) திட்டம் கருவியாக உள்ளது.

பொருத்தமான விண்ணப்பதாரர் காலநிலை மாற்றம், நிலைபெறுதகு அபிவிருத்தி, நிலைபெறுதகு கமத்தொழில், சுற்றாடல் விஞ்ஞானத்தில் பட்டப் பின்படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது முதுநிலை பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 3 வருடகால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கவனிக்கவும்: விவசாயம், விவசாய வியாபாரம் மற்றும் தொழில்நுட்பவியல், சுற்றாடல் விஞ்ஞானம் என்பவற்றில் ஆரம்பப் பட்டத்துடன் நன்கொடையாளர் நிதியுதவித் திட்டத்தில் இதனையொத்த பணி அனுபவம் விரும்பத்தக்கது.

ஆர்வமுள்ளவர்கள் குறிப்பு விதிமுறைகளை (TOR) www.sapp.lk எனும் எமது இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். (குறித்த குறிப்பு விதிமுறையை பதிவிறக்கம் செய்யும்போது "DOWNLOAD" எனும் தலைப்பு மற்றும் "PROCUREMENT" எனும் உபதலைப்பு என்பவற்றை தயவுசெய்து பார்க்கவும்) தயவு செய்து உங்களது தொழில்நுட்ப மற்றும் நிதியியல் முன்மொழிவுகளை (குறிப்பு விதிமுறையின் பிரகாரம் தொடர்புடைய விபரங்கள் சகிதம் முழுமையான விண்ணப்பம்) 2024 ஒக்டோபர் 16ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் தபால் மூலம் / நேரடியாக கிடைக்கச் செய்யவும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயத் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தயவுசெய்து குறிப்பிடவும். தலைவர், ஆலோசகர்கள் பெறுகைக் குழு - திட்டங்கள் (CPCP) சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம், இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய.

மேலதிக விபரங்களுக்கு வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 011-2448031 எனும் தொலைபேசியில் அல்லது gamini@sapp.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் பெறுகை நிபுணரைத் தொடர்புகொள்ளவும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP),**
**இல. 212/A, நாவல வீதி,**
**இராஜகிரிய.**

# பெறுகை அறிவித்தல்

## வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்

### வழங்கல்கள் மற்றும் சேவைகள் – 2025ஆம் வருடம்

வடமேல் மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு 2025ஆம் வருடத்தில் பின்வரும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன என்பதுடன் தகைமை வாய்ந்தவர்கள் அல்லது நிறுவனங்களிடமிருந்து 2024 ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பின்வரும் சேவைகளில் ஒன்று அல்லது இரண்டுக்கும் வெவ்வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

02. விலைமனு மாதிரிப் படிவங்கள் மற்றும் ஏனைய விபரங்கள்:
2024 செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024 ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும் என்பதுடன் விலைமனு மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் தகைமைகள் உள்ளதென்பதை எழுத்து மூலம் உறுதி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

- ❖ தேசிய அடையாள அட்டை
- ❖ குருநாகல் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு – துணிகள் சலவை செய்வதற்கு பொருத்தமான இடம் என்பதற்கு பி.சு.சே. பணிப்பாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்

03.

| வழங்க வேண்டிய நிறுவனம் | வழங்கல்கள் மற்றும் சேவைகள் | விலைக்கோரல் பிணை முறி/ வைப்புப் பத்திரத்தின் பெறுமதி ரூபா | பிணை வைப்பு | |
|---|---|---|---|---|
| | | | மீளளிக்கப்படும் ரூபா | மீளளிக்கப்படாத ரூபா |
| (அ) டீ.பீ. வெலகெதர ஆயுர்வேத வைத்தியசாலை | 1. உலர்ந்த விறகுகள் வழங்குதல் | 25,000.00 | | 1000.00 |
| | 2. அழுக்குத் துணிகளை சலவை செய்தல் | 25,000.00 | | 1000.00 |
| (ஆ) கிராமிய வைத்தியசாலை 1. நாரம்மல 2. தொடம்கஸ்லந்த 3. கிரிமெட்டியான 4. வாரியபொல | 1. உலர்ந்த விறகுகள் வழங்குதல் | | 2,500.00 | 500.00 |
| | 2. அழுக்குத் துணிகளை சலவை செய்தல் | | 500.00 | 200.00 |
| 5. முருதென்கே 6. நெதலகடுவ 7. மாதம்பை | 1. உலர்ந்த விறகுகள் வழங்குதல் | - | 2,500.00 | 500.00 |
| 8. புத்தளம் 9. அம்பன்பொல | 2. அழுக்குத்துணிகளை சலவை செய்தல் | | 500.00 | 200.00 |

04. அழுக்குத் துணிகளைச் சலவை செய்தலின் அதிகூடிய விலைகள் பின்வரும் வகையில் அமையும்.
சிறிய அளவு துண்டுகள் (5 ச.அடிக்குக் குறைவானவை) ஒரு துண்டை சலவை செய்வதற்கு ரூபா 70.00
மத்திய அளவு துண்டுகள் (5 முதல் 18 வரையான ச.அடி) ஒரு துண்டை சலவை செய்வதற்கு ரூபா 90.00
பெரிய அளவு துண்டுகள் (18 ச.அடிக்கு மேற்பட்டவை) ஒரு துண்டை சலவை செய்வதற்கு ரூபா 175.00

05. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024.10.16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் கூட்ட மண்டபத்தில் இடம்பெறும்.

06. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல்.
2024 ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் மாதிரிப் படிவங்களை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையொன்றில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சேவையைக் குறிப்பிட்டு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து மாகாண ஆயுர்வேத அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2024 ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்களுக்கு 037-2228408 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

**எம். பீ.எஸ்.கே.ஆர்.முத்துகல**
**தலைவர் / பெறுகைக் குழு,**
**வடமேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் அலுவலகம்,**
**கொழும்பு வீதி, குருநாகல்.**


தினகரன் வாரமஞ்சரி
OBSERVER aDz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361


# குளியாப்பிட்டிய பிரதேச சபை

## 2025ஆம் வருடத்தின் பொருட்டு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தம்மால் சுயமாகத் தயாரித்துக் கொண்ட விண்ணப்பங்களை முகவரி, வியாபாரத்தின் தன்மை, தகைமை மற்றும் ஏனைய விபரங்களைக் குறிப்பிட்டு பதிவுக் கட்டணத்துடன் பதிவுத் தபாலில் எனக்கு அனுப்புதல் வேண்டும். ரொக்கப் பணமாக அல்லது காசுக் கட்டளை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம். காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளை "செயலாளர், குளியாப்பிட்டிய பிரதேச சபை" எனும் பெயரில் எழுதி அனுப்புதல் வேண்டும். பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2024-11-30ஆம் திகதியுடன் முடிவுறும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். ஒவ்வொரு வழங்கலின் பொருட்டும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொ. இல. | விடயம் / பொருள் சேவைகள் வழங்கல் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | காகிதாதிகள் வழங்குதல் | 1180.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள் / மரம் / உருக்குப் பொருட்கள் | 1180.00 |
| 03 | மின்சார உபகரணங்கள் மற்றும் கருவிகள் (வீதி விளக்கு பராமரிப்பு) | 1180.00 |
| 04 | சுகாதாரம் மற்றும் சிகிச்சை நிலைய உபகரணங்கள் | 1180.00 |
| 05 | கட்டிட நிர்மாணப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 1180.00 |
| 06 | விளையாட்டுப் பொருட்கள் | 1180.00 |
| 07 | பாலர் பாடசாலை உபகரணங்கள் | 1180.00 |
| 08 | அச்சு வேலைகள் | 1180.00 |
| 09 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் | 1180.00 |
| 10 | சீருடைத் துணிகள் / கூடாரம் வகைகள் வழங்குதல் | 1180.00 |
| 11 | டுப்ளோ / ரோணியோ / புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள் | 1180.00 |
| 12 | வீதி நிர்மாணப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 1180.00 |
| 13 | ரெடிமிக்ஸ் வழங்குதல் | 1180.00 |
| 14 | தார் வழங்குதல் | 1180.00 |
| 15 | அறித்தல் பலகைகள் மற்றும் பதாகைகள் வரைதல் / ஞாபகச் சின்னங்கள் | 1180.00 |
| 16 | நிர்மாண வேலைகளுக்கான இயந்திராதிகள் வழங்குதல் | 1180.00 |
| 17 | வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல் | 1180.00 |
| 18 | அனைத்து வகையான வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல் / பெட்டறிகள் வழங்குதல் | 1180.00 |
| 19 | மோட்டார் கிரேடர், ஜேசிபி உட்பட அனைத்து வகையான வாகனங்களுக்கான டயர்கள் வழங்குதல் | 1180.00 |
| 20 | சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளுக்குத் தேவையான உபகரணங்கள் | 1180.00 |
| 21 | கனரக வாகனங்கள் மற்றும் இலகுரக வாகன திருத்தவேலைகள் | 1180.00 |
| 22 | வடிகான் வரம்புக் கற்கள் (ஹியூம் குழாய்கள்) வழங்குதல் | 1180.00 |
| 23 | கணனி மற்றும் கணனி திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் | 1180.00 |
| 24 | வாகன சேர்விஸ் வேலைகள் செய்தல் | 1180.00 |
| 25 | நீர்க்குழாய் உபகரணங்கள் / நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்குதல் | 1180.00 |
| 26 | நில அளவை சேவைகள் வழங்குதல் | 1180.00 |
| 27 | புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவுசெய்தல் | 1180.00 |

**நிர்மாண ஒப்பந்தங்கள்**

| | | |
|---|---|---|
| 01 | 500000.00 ரூபாவுக்குக் குறைந்த வேலைகள் | 1180.00 |
| 02 | 500000.00 ரூபா முதல் 1000000.00 ரூபா வரையான வேலைகள் | 2360.00 |
| 03 | 1000000.00 ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகள் | 3540.00 |

மேற்குறிப்பிடப்பட்ட நிர்மாண ஒப்பந்த வேலைகளுக்கு நிர்மாண (CIDA) நிறுவனத்தின் பதிவைப் பெற்ற நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

தேவையான வேளைகளில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைத் தவிர்ந்த ஏனைய வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**மேலதிக விபரங்களை கடமை நேரங்களில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**
**தொலைபேசி இல. 037-4947212 / 037-4947902**
**அத்துடன் kuliyaps@yahoo.com மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்தியை அனுப்பி பதிவு செய்யும் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

**எஸ்.எம்.என்.கே. குணதிலக்க,**
**செயலாளர்,**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை.**

**2024-09-25**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை

## கொழும்புத் துறைமுகத்தில் உள்ள JCT-V முற்றவெளி பிரதேசத்தின் நடைபாதை வேலைகள்

**(ஒப்பந்த இலக்கம்: SLPA/CD/JCT V/YARD/01)**

1. கொழும்புத் துறைமுகத்தில் உள்ள JCT-V முற்றவெளி பிரதேசத்தின் நடைபாதை வேலைகள் (ஒப்பந்த இலக்கம்: **SLPA/CD/JCT V/YARD/01**) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழ் முக்கியமான வேலையாக முற்றவெளி மற்றும் வீதி நிர்மாணம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. மொத்த முற்றவெளிப் பரப்பளவு 26,000$m^2$ ஆகும் என்பதுடன் மொத்த வீதியின் பரப்பளவு ஏறத்தாழ 5,250$m^2$ ஆகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - விலைமனுதாரர் CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்படுவது) C1 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் வீதி நிர்மாணத்தில் விசேடத்துவ ஒப்பந்தக்காரராக பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ். இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ்நிலை (Online) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
   - விலைமனுதாரர் பின்வருமாறாக அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
     1. கடந்த 10 வருடங்களில் ஒவ்வொன்றும் 600 மில்லியன் ரூபாவிற்குக் குறையாத இரண்டு வீதிகள் / முற்றவெளி நடைபாதை திட்டங்களை பிரதான ஒப்பந்தக்காரராக குறித்த நேரத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
     2. வீதி நிர்மாணத்தில் அனுபவம்
3. கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2024-10-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
4. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 100,000.00 ரூபா (வரிகள் உட்பட) செலுத்துவதன் பேரில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) 2024-09-25ஆம் திகதி முதல் 2024-10-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 175 நாட்கள் வரையில் செல்லுபடியாகும்.
6. விலைமனுக்களை பாதுகாப்பு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து ''கொழும்புத் துறைமுகத்தில் உள்ள JCT-V முற்றவெளி பிரதேசத்தின் நடைபாதை வேலைகள் (ஒப்பந்த இலக்கம்: **SLPA/CD/JCT V/YARD/01**)**"** எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு, அபிவிருத்திப் பிரிவு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறிய முகவரியில் உள்ள துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
7. சகல விலைமனுக்களுடனும் 11,500,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் உத்தரவாதம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் உத்தரவாதம் 2025-05-14ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. இந்த வேலைகளை நிறைவு செய்வதற்கான சட்டகக் காலம் 365 நாட்களாகும்.
9. 2024-10-23ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு, அதன் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
10. ஏதேனும் மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2380517)
11. மேற்காணும் அனைத்தும் eroc.drc.gov.lk எனும் நிகழ்நிலை இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு 01.**

# இலங்கை டெஸ்ட் குழாத்தில் மற்றொரு சுழல் வீரராக நிஷான் பீரிஸ் இணைப்பு




## விஷ்வ பெர்னாண்டோவின் உபாதையால் அணியில் மாற்றம்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் உபாதைக்கு உள்ளான வேகப்பந்து வீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோவுக்கு பதில் வலது கை சுழற்பந்து வீச்சாளர் நிஷான் பீரிஸ் இலங்கை அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

பயிற்சியின்போது விஷ்வ பெர்னாண்டோவின் வலது காலின் தொடைப் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்தே அவர் இலங்கை டெஸ்ட் குழாத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் உபாதையில் இருந்து மீண்டு வருவதற்காக உயர் செயல்திறன் மையத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கைக் குழாத்தில் மேலதிக சுழற்பந்து வீச்சாளராகவே 27 வயது நிஷான் பீரிஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணி நியூசிலாந்துக்கு எதிராக காலியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறுவதற்கு சுழற்பந்து வீச்சாளர்களே பெரும் பங்காற்றினர். இந்தப் போட்டியில் பிரபாத் ஜயசூரிய மொத்தம் 9 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு அணியில் இடம்பெற்ற மற்ற சுழற்பந்து வீச்சாளரான ரமேஷ் மெண்டிஸ் மொத்தம் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

எனினும் முதல் டெஸ்ட்டில் இலங்கை அணி அசித்த பெர்னாண்டோ மற்றும் லஹிரு குமார ஆகிய இரு விசேட வேகப்பந்து வீச்சாளர்களை பயன்படுத்தியதோடு விஷ்வ பெர்னாண்டோ இடம்பெறவில்லை.

இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியும் அதே காலி மைதானத்தில் நடைபெறவுள்ளதால் சுழற்பந்துக்கு சாதகமாக நிஷான் பீரிஸ் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நிஷான் பீரிஸ் 2018 மற்றும் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இரு முறை இலங்கை டெஸ்ட் குழாத்தில் இடம்பெற்றபோதும் அவருக்கு அணியில் ஆட இதுவரை இடம் கிடைக்கவில்லை. இந்நிலையில் இம்முறையும் அவர் டெஸ்ட் குழாத்தில் இடம்பெற்றபோதும் தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடும் வாய்ப்பை பெறுவது சந்தேகமாகவுள்ளது.

எவ்வாறாயினும் முதல் டெஸ்டில் ரமேஷ் மெண்டிஸின் பந்துவீச்சு தொடர்பில் அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா போட்டி முடிவில் அதிருப்தியை வெளியிட்ட நிலையில் அவருக்கு பதில் நிஷான் பீரிஸை அழைக்கவும் வாய்ப்பு உள்ளது.

முதல் டெஸ்டில் மெண்டிஸ் இரு இன்னிங்ஸ்களிலும் தலா மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தி எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தபோதும் பந்தை கட்டுப்படுத்த முடியாது அடிக்கடி மோசமான பந்துகளை வீசுவது எதிரணி துடுப்பாட்ட வீரர்கள் மீதான அழுத்தத்தை குறைப்பதாக இருந்தது என்று அதிருப்தி வெளியிடப்பட்டது.

அவர் இதுவரை 41 முதல்தர போட்டிகளில் ஆடி 172 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவரது பந்துவீச்சு சராசரி 24.37 ஆகும். அண்மையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடரில் முதல் போட்டியில் அவர் இலங்கை ஏ அணிக்காக 3 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாளை (26) காலி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.



## சர்வதேச செய்திகள்

# பெரும் உயிரிழப்புகளிடையே லெபனானில் இஸ்ரேல் தொடர்ந்தும் உக்கிர தாக்குதல்

## ஹிஸ்புல்லாவின் பதில் தாக்குதல்களால் மோதல் உச்சம்

கடந்த பல தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு ஒரே நாளில் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்திய லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களைத் தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே நேற்றும் (24) கடுமையான மோதல் நீடித்தது.

தெற்கு லெபனானில் உள்ள பல டஜன் ஹிஸ்புல்லா இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவம் நேற்று கூறியதோடு இஸ்ரேலுக்குள் 60 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் வெடிபொருள் தொழிற்சாலை ஒன்று உட்பட பல இஸ்ரேலிய இராணுவ இலக்குகளை பாத்தி ரக ரொக்கெட்டுகள் கொண்டு தாக்கியதாக ஹிஸ்புல்லா அமைப்பு நேற்றுக் காலை கூறியது.

இதில் நேற்று அதிகாலை 4 மணி அளவில் வெடிபொருள் தொழிற்சாலையை தாக்கியதோடு மெக்கிமேடா விமானப்படை தளம் மீது மூன்று வெவ்வேறு நேரங்களில் தாக்கியதாக ஹிஸ்புல்லா குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் தனது தெற்கு எல்லையான காசாவில் சுமார் ஓர் ஆண்டாக ஹமாஸ் அமைப்புக்கு எதிராக போரிட்டு வரும் நிலையில் அது தற்போது லெபனானுடனான வடக்கு எல்லையில் அவதானம் செலுத்த ஆரம்பித்துள்ளது. காசா போரை ஒட்டி ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது கடந்த ஓர் ஆண்டாக ரொக்கெட் குண்டுகளை வீசி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா குழுவினர் மீது தாக்குதல் நடத்தியதாக குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேல் இராணுவம் தமது பீரங்கிகள் மற்றும் டாங்கிகள் ஹிஸ்புல்லா இலக்குகளை தாக்கியதாகக் கூறியது. வடக்கு இஸ்ரேலில் இடைமறிக்கப்பட்ட ஏவுகணைகளின் பாகங்கள் பல இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டதாக இஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் 50 சிறுவர்கள் மற்றும் 94 பெண்கள் உட்பட உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 558 ஆக அதிகரித்திருப்பதாக லெபனான் சுகாதார அமைச்சர் பிராஸ் அபியாத் நேற்று (24) தெரிவித்தார். இராணுவ இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் கூறுவதை அவர் செய்தியாளர் சந்திப்பில் மறுத்தார்.

இதுவரை குறைந்தது 1835 பேர் காயமடைந்திருப்பதோடு 54 மருத்துவமனைகளில் காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொல்லப்பட்டவர்களில் நான்கு துணை மருத்துவர்கள் இருப்பதோடு மேலும் 16 பேர் காயமடைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் சுமார் 500 பேர் கொல்லப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேறியதாக லெபனான் நிர்வாகம் தெரிவித்தது. லெபனானில் ஹிஸ்புல்லா நிலைகளுக்கு அருகில் இருக்கும் பொதுமக்களை வெளியேறும்படி இஸ்ரேல் அறிவுறுத்திய நிலையிலேயே அங்கு பயங்கரத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.



இஸ்ரேலிய கொடூரங்களில் இருந்து தப்பி வரும் பொதுமக்களுக்காக 26,000க்கும் அதிகமானவர்களுக்கு அடைக்கலம் வழங்கும் வகையில் பாடசாலைகள் மற்றும் ஏனைய வசதிகளில் 89 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாக லெபனானின் அனர்த்த பதில் ஒருங்கிணைப்பு அமைச்சர் நாசர் யாசின் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

லெபனானின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கில் ரொக்கெட் ஏவு நிலைகள், கட்டளை முகாம்கள் மற்றும் இராணுவ உட்கட்டமைப்புகள் உட்பட ஹிஸ்புல்லா இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. தெற்கு லெபனான் மற்றும் பெக்கா பள்ளத்தாக்கில் சுமார் 1,600 ஹிஸ்புல்லா இலக்குகளை இஸ்ரேல் விமானப் படை தாக்கியது என்றும் அது குறிப்பிட்டது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பயங்கரத் தாக்குதல்களில் 35 சிறுவர்கள் உட்பட குறைந்தது 492 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 1,645 பேர் காயமடைந்ததாக லெபனான் சுகாதார அமைச்சு குறிப்பிட்டது. 1975–1990 சிவில் யுத்தம் தொடக்கம் லெபனானில் நாளொன்றில் கொல்லப்பட்ட அதிக எண்ணிக்கை இது என்று லெபனான் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் துறைமுக நகரான டைரேவுக்கு அருகே இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் ஒட்டுமொத்த குடும்பம் ஒன்று கொல்லப்பட்டதாக லெபனான் தேசிய செய்தி நிறுவனம் தெரிவித்தது. இந்தத் தாக்குதலில் ஓய்வுபெற்ற இராணுவ கேணல் ஒருவர் அவரது மனைவி மற்றும் மூன்று மகள்மார் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையிலான போர் முழுவீச்சில் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் டெல் அவிவ் மற்றும் பெய்ரூட்டுக்கான பல விமான சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டிருப்பதோடு அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் வெளியேற ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மாத ஆரம்பத்தில் காசாவில் இருந்து லெபனான் மீது அவதானம் செலுத்தப் போவதாக இஸ்ரேல் அறிவித்த நிலையிலேயே இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியது.

எனினும் லெபனான் முனையில் போர் விரிவடைவது குறித்து உலகத் தலைவர்கள் கவலை வெயிட்டு வருகின்றனர். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இதில் தலையிடுவதற்கு பிரான்ஸ் மற்றும் எகிப்து அழைப்பு விடுத்திருக்கும் அதேநேரம் நியூயோர்க்கில் நடைபெறும் பொதுச் சபைக் கூட்டத்திற்கு இடையே அரபு நாடுகளின் ஒன்றுகூடல் ஒன்றுக்கு ஈராக் அழைப்பு விடுத்துள்ளது. மத்திய கிழக்கிற்கு ஏற்கனவே போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளை அனுப்பி இருக்கும் நிலையில் அந்தப் பிராந்தியத்திற்கு சிறு எண்ணிக்கையான மேலதிக அமெரிக்கப் படையினர் அனுப்பப்பட்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகன் குறிப்பிட்டது.

இஸ்ரேலிய எல்லைப் பகுதிகளில் இருந்து ஹிஸ்புல்லாவை பின்தள்ளி அவர்களின் அச்சுறுத்தலை தணிப்பது மற்றும் அவர்களின் உட்கட்டமைப்புகளை அழிக்கும் நடவடிக்கையில் இஸ்ரேலியப் படை ஈடுபட்டிருப்பதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் லெபனான் கிராமங்கள் மற்றும் நகரங்களை அழிக்கும் இலக்குடனான இஸ்ரேலின் திட்டத்தை ஐக்கிய நாடுகள் மற்றும் உலக வல்லரசுகள் தடுக்க வேண்டும் என்று லெபனான் பிரதமர் நஜீப் மிகாதி வலியுறுத்தியுள்ளார்.

வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியாக உலகத் தலைவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தை ரத்துச் செய்துவிட்டு நியூயோர் பயணிக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# காசாவில் உயிரிழப்பு 41,467 ஆக அதிகரிப்பு



லெபனானில் இஸ்ரேலியத் தாக்குதல்கள் தீவிரமடைந்த போதும் காசாவிலும் தொடர்ந்து இடம்பெற்று வரும் தாக்குதல்களில் நேற்றும் (24) பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு நகரான கான் யூனிஸில் இரு வீடுகள் மீது இடம்பெற்ற இஸ்ரேலின் வான் தாக்குதல்களில் ஆறு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர். அதேபோன்று ரபா நகரில் கார் ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய ஆளில்ல விமானத் தாக்குதலில் மேலும் இருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

இதன்படி சுமார் கடந்த ஓர் ஆண்டாக இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,467 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 95,921 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் மேலும் 12 பேர் கொல்லப்பட்டு, 32 பேர் காயமடைந்ததாக அந்த அமைச்சு குறிப்பிட்டது.

காசா போரை முடிவுக்குக் கொண்டுவருது மற்றும் பலஸ்தீன போராளிகளின் பிடியில் இருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிக்கும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்துள்ளன. இந்நிலையில் லெபனான் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான மோதல் தீவிரம் அடைந்திருப்பதால் காசா மீதான சர்வதேச அவதானம் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெற்கு லெபனானில் இருந்து அச்சத்தால் மக்கள் ஓட்டம்

இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்த நிலையில் தெற்கு லெபனானில் உள்ள மக்கள் தமது உடைமைகளை சுமந்தபடி கார்கள் மற்றும் வாகனங்களில் வடக்கை நோக்கி கூட்டமாக வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா நிலைகளுக்கு அருகில் இருந்து வெளியேறும்படி எச்சரித்து சில குடியிருப்பாளர்களுக்கு இஸ்ரேலிடம் இருந்து குறுஞ்செய்தி அல்லது குரல் பதிவுகள் வந்துள்ளன. குண்டுத் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருப்பதாக தெற்கு நகரான நபட்டியேவில் உள்ள சஹ்ரா சவ்லி என்ற பல்கலை மாணவி, பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

'காலை 6 மணிக்கு எழுந்தபோது குண்டுகள் விழும் சத்தங்கள் கேட்டன. நண்பகலாகும்போது அது தீவிரம் அடைந்ததோடு எனது வீடு இருக்கும் பகுதியில் குண்டுகள் விழுவதைக் கண்டேன். கண்ணாடிகள் உடையும் சத்தங்களைக் கோட்டேன்' என்று அந்த மாணவி குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தலைநகர் பெய்ரூட்டை நோக்கிச் செல்லும் வீதியில் பெரும் நெரிசல் ஏற்பட்டதோடு ஆறு வழி நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலும் பெரும் நெரிசல் ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



எனினும் பெய்ரூட்டிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இங்கு ஹிஸ்புல்லா ஆயுதக் களஞ்சியங்கள் இருக்கும் இடம் என்று கூறும் பகுதியில் இருந்து மக்களை வெளியேறுவதற்கு இஸ்ரேல் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதில் சிலர் பாடசாலை சென்றிருக்கும் தமது பிள்ளைகளையும் பாதியிலேயே அழைத்துக் கொண்டு அவசரமாக வெளியேற ஆரம்பித்துள்ளனர். 'எச்சரிக்கை விடுத்து தொலைபேசி அழைப்பு வந்ததால் பிள்ளையை அழைத்துச் செல்ல வந்ததாக இஸ்ஸா என்ற தந்தை ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

'அவர்கள் எல்லோரையும் அழைத்து தொலைபேசியில் எச்சரிக்கை விடுக்கிறார்கள்.

எனவே நான் பாடசாலையில் இருந்து மகனை அழைத்துச் செல்ல வந்தேன். நிலைமை பாதுகாப்பானதாக இல்லை' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 25ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.